தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57 மலர் : 11

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2015 — உருத்ரோத்காரி மாசி
(1984 பிப்ரவரி — மார்ச்)

MALLIKA ARTS TJ

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL

தமிழ்ப் பொழில்

துணர் : 57 உள்ளுறை மலர் : 11

1. நூலும் — நூலகமும் 481
த. அழகப்பராசு

2. திருவள்ளுவர் வகுத்த 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' 487
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. இரு நட்பு 492
அமுத. இளவழகன், பி.லிட், பி.எட்.,
குரு குலம்

4. ஷெய்கு முஹம்மது பாவலர் 494
ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்களின்
குடும்பத்தினர்கள்.

5. 'குற்றியல் உகரமும் அற்றென மொழிப'
என்ற காப்பியர் நூற்பாவிற்கு உரிய
இடம் யாது ? 499
வை. தங்கமணி, எம்.ஏ., பி.லிட்., தமிழாசிரியர்
பி.கே.என். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருமங்கலம் - 626 706.

6. தொல்காப்பியம் கூறும் எழுத்து வடிவம் ... 504
(ஆய்வுக்கட்டுரை) பேராசிரியர் ச. பாலசுந்தரம்

7. சிவபுராண யாப்பு 517
திரு. அடிகளாசிரியர்,
இணைப் பேராசிரியர், சுவடிப்புலம்,
ஓலைச் சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-1.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் யாண்டு — 2015 உருத்ரோத்காரி — மாசி பிப்ரவரி — மார்ச் 1984	மலர் 11

நூலும் — நூலகமும்

த. அழகப்பராசு

நூல்

படைப்பாளனின் பலகால முயற்சிக்குப் பின்னர் உருவாகின்றது நூல். அது நூல் என்ற பெயரைப் பெறுமுன்னர் வேறுபல பெயர்களையும் பெற்று வழங்கிவந்திருக்கின்றது. ஏடு-ஓலை-சுவடி-தூக்கு-பனுவல்-புத்தகம்-நூல் என்ற முறையில் நூலின் பெயரமைப்பு வளர்ந்துள்ளது.

ஓலை என்னும் சொல் பனை ஓலை தென்னை ஓலை இரண்டையும் குறிக்கப் பயன்படுகின்றது. ஆனால் 'ஏடு' என்பது பனையேட்டைக் குறிக்கமட்டுமே வழங்கி வந்திருக்கின்றது. இதற்குக் காரணம் உண்டு. தென்னை ஓலைகள் ஒன்றோடொன்று இணைந்திடாமல் தனித்தனியாகவே இருக்கும்,

ஆனால் பனையோலைகள் தனித்தனியாக இல்லாமல் இணைந்த நிலையில் ஏடுபோன்று அமைந்துள்ளது. தென்னை ஓலைகள் தனித்தனியே இருப்பது போன்று பனை ஏடுகளையும் தனித்தனியே பிரித்தெடுக்கலாம். இந்த இயல்பு கொண்டு ஏடுகளையும் ஓலை என்று அமைத்திருப்பர் போலும்.

நூல் தொடர்பாக எழுதப்பட்ட செய்திகள் பனையோலையில் எழுதப்பட்டன. ஏடு என்பது அவ்வகையில் எழுதப்பட்ட நூலைக் குறிப்பதாயிற்று. அவ்வாறே ஓலையும் எழுதிய நூலுக்குப் பெயராக அமைந்தது, சுவடி என்பது ஓலை, ஏடு ஆகிய இவற்றி னின்றும் மாறுபட்டது. ஓலை ஏடு என்பன எழுதப்படாத ஓலைகளுக்கும் பெயராக அமைந்தது. சுவடி என்பது எழுதப்படாத ஓலைகளை மட்டுமே குறிக்கும். மணலிலும், மண் தரையிலும் நடக்கும்போது மனிதனின் கால் சுவடு பதிகின்றது. விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் சுவடுகளும் (மணலிலும், ஈரமான மண் தரையிலும்) படிகின்றன. அது போன்று மனித எண்ணங்கள் - கருத்துகள் ஏடுகளில் பதிக்கப்படுவதனால் சுவடி என்றாகி இருக்கலாம். எழுதப் பயன்பட்ட ஓலை நாளடைவில் எழுதிய நூலுக்கும் பெயராக அமைந்துவிட்டது.

கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்கள்

என்று பண்டைத் தமிழரின் குடவோலைத் தேர்வு முறையை விளக்குகிறது அகநானூறு[1]

ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர் என நாலடியாரும்[2], மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கிலும் என நன்னூலும்[3] குறித்துச் செல்கின்றன.

ஓலையில் தமது கருத்துச்சுவட்டைப் பதித்த தமிழ் மக்கள் அதைச் சுவடியென்றழைத்தனர். 'பாட்டுப்புறம் எழுதிய கட்டமைச் சுவடி' என்பது பெருங்கதை[4].

தூக்கு என்பது செய்யுள் என்ற பொருள்பட அமைகின்றது. செய்யுளே நூலாக உருவெடுத்தும் அது தூக்கு என்ற பெயரைத் தாங்கியது. சுவடிகளைத் தாங்கிப் பள்ளிக்குச் செல்வதால் தூக்கு என்றாகியிருக்கலாம்.

பனுவல் என்பது சொல்லுவது என்று பொருள்படும். சொல்லப் பட்ட கருத்துத் தொகுதியும் நாளடைவில் பனுவல் என்ற பெயரைக் கொண்டது.

மெய்யறி பனுவல்[5]
வரிநவில் பனுவல்[6]

என்பன அதற்குச் சில சான்றுகள்.

இது போன்றே புதிய கருத்தைத் தன்னகத்தே கொண்ட இடம் நூல் புத்தகம் என்று பெயர் பெற்றது. செய்திகளை கருத்துகளை நுவல்வதால் அது நூல் என்றும் அழைக்கப்பெற்றது. நூற்கப்பட்ட பஞ்சு நூலையும், அறிவு நூலையும் ஒப்பிடுவது தவறு என்றும் (நன்னூல்) நுவல்வதே நூல் என்றும் கருதுகின்றனர்? எனவே நூல் என்ற பெயரைப் பெறுமுன் முறையே ஏடு,ஓலை, சுவடி தூக்கு பனுவல், புத்தகம் என்ற பல பெயர்களைத் தாங்கி வழங்கி வந்திருக்கின்றது.

நூலகம் :

(நூல் + அகம் = நூலகம்) நூலைத் தன்னகத்தே கொண்டது நூலகம் எனப்படும். இது பண்டாரம் (கருவூலம்) சரசுவதி பண்டாரம், புத்தகப் பண்டாரம், ஏடகம், சுவடிச்சாலை, சுவடியகம், புத்தகசாலை, நூல்நிலையம், நூலகம் எனவும் வழக்குகளைப் பெற்றன.

நூலகம் என்பது நாம் இன்று காண்பது போன்று பொது நிலையில் எல்லா மக்களும் சென்று, பயன்படுத்தும் நிலையில் அமைய வில்லை. தொடக்க காலத்தில் நூல்கள் ஆங்காங்கே தனித் தனியே பயில்வோரிடம் மட்டும் இருந்தன. வைத்திருப்போருக்கும் அவை எல்லாக் காலங்களிலும் பயன்பட்டன என்று கூற இயலாது. அதனால்-அவை கவனிப்பாரற்று மூலை முடுக்குகளில் அழுக்கும், தூசும், அடுப்புப் புகையும் படிந்த பரண்களில் ஏனோ தானோ என்று கட்டப்பட்டு முடங்கிக் கிடந்தன.

அடுத்த நிலையில் நூல்களைப் பயன்பாடு கருதிப் பாதுகாப்பான இடங்களில் பதுக்கி வைத்தனர் அல்லது ஒளித்து வைத்தனர். நூலகம் என்ற சீனமொழிச் சொல்லிற்கு நூல்களை'ஒளித்து வைக்கு மிடம் என்ற பொருள் இருப்பதும் இங்குக் கருதத்தக்கது. மறைத்து வைக்கின்ற நிலையானது மாற்றம் பெற்றுப்-பத்திரமாக இருக்க ஒரு சிறந்த இடம் தேடினர். பெரும்பான்மையும் இறையாலயங் களை நூல்களைப் பாதுகாத்து வைக்கச் சிறந்த இடமாகக் கருதினர். எனவே நூல்கள் ஆலயங்களில் பாதுகாக்கப்பட்டன. சமய நூல்கள் தவிர்த்த ஏனைய நூல்கள் அங்கு வைக்கப் பெறவில்லை. இதனால் பெரும்பாலான இலக்கிய நூல்கள் ஒரு சிலரிடம் மட்டும் பாதுகாக்கப் பெற்றன.

பண்டாரம் என்பதற்குக் கருவூலம், சேர்த்து வைக்கும் இடம் என்று பொருளுரைப்பர். கல்விக்கு இறைவியாக சரசுவதியைக் கருதுவர். எனவே அறிவுத் தொடர்பானவற்றைத் தொகுத்து வைக்கும் இடங்கள் சரசுவதி பண்டாரம் எனப்பட்டன. இதைப் புத்தகப் பண்டாரம் என்றும் அழைப்பர். சங்கரர் இவ்வகையில் நூலகம் ஒன்றை தான் வாழ்ந்த மடத்தில் வைத்திருந்தாராம். அதிலிருந்து எடுத்து விஷ்ணு ஸகஸர நாமத்திற்கு உரை எழுதினார் என்பர்.[8]

ஆலயத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் எப்போதும் அந்தணர்கள் உறவு கொண்டிருந்தனர். எனவே ஆலயங்களில் உள்ள சுவடிகள் அந்தணர் இல்லங்களில் குடிபுகுந்திருந்தன. அந்நியர் படையெடுப்புகளின் போது நிகழ்த்தப் பெறும் ஆலய அழிப்புகள், ஆலையத்தினைப் புதுப்பித்தல், ஆலய இடமாற்றம் போன்றவற்றின்போது இவை ஆலயங்களிலிருந்து அந்தணர் இல்லங்களுக்குச் சென்றன. மேலும் கரையான் போன்றவற்றினின்றும் பாதுகாக்கவும், வெள்ளம் தீ இவற்றிற்கு இரையாகாமல்தடுக்கவும் அவை புரோகிதர்களின் இல்லங்களுக்குச் சென்றிருக்கலாம். சிலவேளைகளில் அவை மேற்கண்ட காரணங்களால் அரசர்களின் அரண்மனைகளிலும் இடம்பெறத் தொடங்கின. இப்படி ஆங்காங்கே சிதறிக் கிடந்த சுவடிகளைச் சேகரிப்பது மிகக் கடினமான வேலை தான். அதைச் செய்தவர்கள் தங்களுக்குக் கிடைத்தவற்றைப் பாதுகாத்துப் பத்திரமாக வைத்த இடம் நூலகமாகக் கொள்ளப் பட்டது.

துவரசதி அம்மன் கோவிலில் ஒரு சரசுவதி பண்டாரம்-நூலகம் இருந்தது. அந்த நூலகத்தை நடத்திவந்த சரசுவதி பண்டாரத்திற்கு (நூலகர்) இரண்டு மாநிலம் வாச்ச பாண்டிய பிரமதாராயரால் கொடுக்கப்பட்டது என்ற செய்தியைச் சேரன்மாதேவி கல்வெட்டில் இருந்து அறிகின்றோம்.

புத்தகமே சாலத்தொகுத்தும் புகழ் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள்தெரிந்து
தோற்றும் புலவரும் வேறு[9]

என்பதால் புத்தகத்தைப் பயன்பாடில்லா நிலையில் பலர் தொகுத்திருந்தனர் என அறியலாம்.

கர்நாடக மாநிலத்தில் — கம்பளக்குடியின் 60-கல் கோயில் கல்வெட்டு (சாளுக்கிய அரசன் இராயநாராயணன், கி. பி. 1508

காலத்தது) கடிகாசாலா என்ற கல்லூரியைப் பற்றிக் குறிக்கின்றது. அதிலிருந்து நூலகத்தில் சரசுவதி பண்டாரம் அறுவர் இருந்த செய்தியை அறிகிறோம்.

> *பல ஏடுகள் பார்க்கவும், எழுதவும் அவிழ்த்து வாசிப்பவும்*
> *முன்பட்டை சரசுவதி பண்டாரத்தில் எழுதிக்கிடக்கிற*
> *கிரந்தங்கள், கிரந்தங்களிலும், தமிழ்களிலும் எழுத*
> *வேண்டுவன*
> *எழுதி ஒக்கப் பார்த்து*

என்று கூறுகிறது தென்னாற்காடு மாவட்ட (சிதம்பரம்) த்திலுள்ள கல்வெட்டு ஒன்று சரசுவதி பண்டாரத்தில் உள்ளனவற்றைப் பார்க்க — எழுத — படிக்க — படி எடுக்க — அமைந்ததைச் சுட்டுகின்றது.

இந்த நிலை சற்று மாற்றம் பெற்றது. காலவெள்ளத்தால் காக்க முடியாமல் பலசுவடிகள் தாமாகவே அழியத் தொடங்கின. அவற்றைப் பாதுகாத்து வைக்கக் கருதிப் படியெடுத்தனர். புலவர் குழுக்கள் இந்த வேலையைச் செய்தனர். சிலபோழ்து இதற்கென்று தனியாகப் படியெடுப்போரை அமர்த்தியும் படியெடுத்தனர். கனிஷ்கர் புத்த சமய விளக்கங்களைச் செப்பேடுகளில் எழுதச் செய்து எழுதிய பெட்டிகளைப் பத்திரமாக அடுக்கி நந்தவனத்திலே புதைத்து வைத்ததாக யுவான்சுவாங் குறிப்பில் காணப்படுகின்றது[1]

சமண சமயம் தமிழகத்தில் பரவத் தொடங்கிய காலத்தில் எழுந்த நூல்களைச் சேர்த்து வைத்த இடங்கள் ஞானப்பண்டாரங்கள் (Gnana Bhandaras) எனப்பட்டன. சசல்மோர், பத்தான், சூரத், காம்பே, வல்லபி, அகமதாபாத், தோல்கர், கர்ணவதி போன்ற இடங்கள் ஞானப்பண்டாரங்கள் இருந்த இடங்களில் குறிப்பிடத் தக்கவனவாகும். ஞானப்பண்டாரங்களில் தொகுத்து வைக்கப் பட்ட நூல்களை ஆண்டுக்கொருமுறை எடுத்துச் செம்மைப் படுத்துவர். அப்போது அருகிலுள்ள நூல்கள் படியெடுக்கப்படும். அவற்றை அங்குத் தேவையானோர்க்கு வழங்குவர். இதைப் புத்தகம் தானம் என்பர்.

அமரபட்டன், மதன்மந்திரி, கிரிவாஸ்துபாலன், குமார பாலதேவன் போன்றோர்கள் இப்படிப் படியெடுத்தோரில் குறிப்பிடத் தக்கோராவர்.

தரங்கம்பாடியல் முதன்முதலில் ஒரு தமிழ் நூலகத்தைச் சீசன்பால்கு உருவாக்கினார் அதில் இடம்பெற்ற சுவடிகளில் 14 சுவடிகள் அவரால் எழுதப்பட்டவை; 21 சுவடிகள் அக்கால ரோமன்

கத்தோலிக்கப் பாதிரியார்களால் எழுதப்பட்டவை. 119 இந்துமதச் சுவடிகளும் 11 முஸ்லீம் மதச் சுவடிகளும் அதில் இருந்தன. இதில் 112 தமிழ்ச்சுவடிகள் தற்போது இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளன. (A Little Book of Christian Morals) என்ற தலைப்பில் சீசன்பால்கு 13 ஓலைச்சுவடிகளில் தமிழ்மொழியின் எதிர்மறை உடன்பாட்டு முறையில் வாக்கியங்களை எழுதியுள்ளார்.[11]

இஸ்லாமியர் ஆட்சிக் காலத்தில் நூலகத்தில் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. தம் தாயகத்தில் இருப்பது போன்று, ஆட்சிபுரிந்த இடங்களிலும் நல்ல நூல்களைக் கொண்ட நூலகங் களை ஏற்படுத்தினர்.

நூலகத்தின் தலைவராய் — நூலகராய் விளங்கியவர்கள் பன் மொழிப் புலமையும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்தார். இவர் நசீம் (Nazim) என்றழைக்கப்பட்டார்' துணை நூலகர் தரோகா— இ — குதுப் கானா (Darogha — C — Kutup — Kana) இத்துடன் படித்துக் காட்டுவோர் (Kitabadar) நூல் எழுதுவோர் (Ragam) மொழிபெயர்ப்பாளர் அவற்றை அழகாக எழுதஎழுதுநர்(Kushnavie) ஒப்புநோக்குவோர் (Mugabhila Navis) அவற்றைத் திருத்துவோர் (Magahim) வண்ணம் தீட்டுபவர் (Naggash) ஓரம் எழுதுநர் (Jadhal saz) தூசு துடைப்போர் (Sahahat) போன்றோரும் இருந்தனர்.

அறிவியல் வளர்ச்சியால் — அறிவு வளர்ச்சியால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது; அச்சுக்கலை முன்னேறியது; அதன்வழி தொகுக்கப்பட்ட நூல்கள் அச்சாக்கம் பெறத் தொடங்கின; வெளி யீடுகள் பெருகின. பாதுகாப்பதற்கும், படியெடுப்பதற்கும் பயன் பட்டுவந்த இந்த இடங்கள் மக்களின் தேவைகளை உணர்ந்து நூல்களைக் கொடுத்து வாங்கவும் பயன்பட்டது. இந்நிலையே சற்று விரிவடைந்து நூலகங்கள் பணிநிலையங்களாகவும், சமுதாய ஒருங்கிணைப்புக் கூடங்களாகவும், மாறி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாய் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்று உணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெலாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகச்சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அவரொடு செய்து கொள்ளும் நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துன்பத்தை உண்டாக்கும் என்பதென்ன,

''ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்'' (குறள் 792)

எனும் குறட்பா தெரிவிக்கிறது.

'ஆய்ந்தாய்ந்து' எனும் அடுக்குப் 'பலமுறையும், பலவகை யாலும் ஆராய்வதையே சுட்டுகிறது.

ஒரு செயலை செய்கின்ற பொழுது இடையூறு உண்டாகாமல் அதனை எப்படி செய்வது, எதிர்பாராவகையில் தடங்கல் உண்டா னால், மனம் தளராது எவ்வாறு அச்செயலை செய்து முடிப்பது என்பதை ஆழ்ந்து சிந்தித்து, ஆராய்ந்து நுட்பமாகப் புரிந்து கொண்ட பிறகு அச் செயலினைத் தொடங்க வேண்டும் என்பதை,

''ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டன்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்'' (குறள் 662)

என்று தெரிவித்துள்ளார்.

இனித் 'தேர்ந்து' கொள்ளுதல் எனும் பொருளிலும் இச் சொல்லை வள்ளுவர் பயன் படுத்தியுள்ளார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

குறிப்புகள்

1. அகநானூறு, 77, 7–8.
2. நாலடியார், பா. 397.
3. நன்னூல் நூற்பா-53.
4. பெருங்கதை (3:1:1 வ).
5. தொல்காப்பியம் நூ. 580.
6. புறநானூறு, 135.
7. டாக்டர் தி.சு. சத்தியம், நுவலே நூல், ஏழில் நான்கு பா. 65-87
8. வே. தில்லைநாயகம், இந்திய நூலக இயக்கம், ப. 168.
9. நாலடியார், 318.
10. நூலக இயக்கம், ப. 117-118.
11. தீக்கதிர், உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1981, ப.19.

"*வல்லார் நட்பு* **ஆய்ந்து** *கொளல்*" (குறள் 795)
'**ஆயிழை**" (குறள் 1124)
"**ஆய்தொடியார்**" (குறள் 911)

எனும் தொடர்களை நோக்குக. 'வல்லவருடைய நட்பினைத் தேர்ந்து கொள்ள வேண்டும்' 'தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளை அணிந்துள்ள மகளிர்', தேர்ந்தெடுக்கப்பட்ட வளையல்களை அணிந்துள்ள பெண்டிர் எனும் பொருளினை இவை புலப்படுத்து கின்றன,

இவற்றிலிருந்து 'ஆய்ந்து' எனும் சொல்லை, நுட்பமாகக் காணுதல், சீர்தூக்கிப் பார்த்தல் தேர்ந்து கொள்ளல் எனும் மூவகைப் பொருளில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகிறது.

தெரிதலும் ஆராய்ச்சியும்

திருக்குறளில் 'தேர்' எனும் சொல் சீர்தூக்கிப் பார்த்துத் தெரிந்து எடுத்தல்' எனும் பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது இப்பொருளும் 'ஆராய்ச்சி செய்வதையே வெளிப்படுத்துகிறது.

'தேர்' எனும் பகுதியடியாகப் பிறந்த தேரினும் (குறள் 508) தேரான் (குறள் 144, 510), தேராத (குறள் 504), தேர்ந்து, (குறள் 441, 462, 541, 634), தேர்ந்த பின் (குறள் 509) எனும் பல சொற்களை வள்ளுவர் வழங்கியுள்ளார். இவற்றுள் ஒன்றை மட்டும் இங்குக் காண்போம்.

ஒருவனை ஆராயாது தெளிதலும், ஒருவனை ஆராய்ந்து தெளிந்த பின் அவனைப்பற்றிச் சந்தேகப்படுவதும் ஆகிய இரண்டும் தலைவனுக்கு நீங்காதத் துன்பத்தைத் தரும் எனும் பொருளமைந்த,

"**தேரான் தெளிவும்** *தெளிந்தான்கண் ஐயுறவும்*
தீரா இடும்பை தரும்" (குறள் 510)

எனும் குறளில், 'தேரான்' எனும் சொல், 'ஆராயாதவன்' எனும் பொருளில் வழங்கப் பட்டுள்ளமை கருதத்தக்கது.

நாடலும் ஆராய்ச்சியும்

'நாடு' எனும் அடிச்சொல் அடியாக அமைந்தவை. நாடல், நாடுதல், நாட்டம் எனும் சொற்களாகும். 'நாடு' எனும் சொல்லிற் குத் தேடுதல், ஆராய்தல், தெரிதல், விரும்புதல். ஒத்தல், அளத்தல், கிட்டுதல், நினைத்தல், மோப்பம் பிடித்தல், அளவுபடுதல் எனும்

பத்துவகைப் பொருள்கள் வழக்கில் உள்ளன. இவற்றுள் முதன் மூன்று பொருள்களும், இறுதியில் உள்ள பொருளும் ஆராய்ச்சியோடு தொடர்புடையன. இப்பொருளிலேயே இச்சொல், திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை ஆராய்ந்து அறிந்து, அவற்றைச் செவிக்கு இனிதாக ஒருவன் சொல்வான் ஆனால், அவனுக்குத் தீவினைப் பயனாகிய பாவம் குன்றிவிடும்; நல்வினைப் பயனாகிய புண்ணியம் வளரும் எனும் கருத்தைத் தெரிவிக்கும் குறட்பாவை நோக்குவோம்.

" ***அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை***
நாடி இனிய சொலின் " (குறள் 96)

இதே பொருளில்

'' ***குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள்***
மிகைநாடி மிக்க கொளல் '' (குறள் 504)

'' ***நன்மையும் தீமையும் நாடி*** " (குறள் 511)

'' ***செய்வானை நாடி, வினை நாடி*** (குறள் 516)

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன் ''
(குறள் 553)

'' ***தக்காங்கு நாடித் தலைச்சொல்லா வண்ணத்தால்*** ''
(குறள் 561)

''***நோய்நாடி, நோய்முதல்நாடி, அதுதணிக்கும்***
வாய்நாடி வாய்ப்பச் செயல்'' (குறள் 949)

'ஆராய்ந்த' எனும் பொருளில் நாடிய எனும் சொல் வேறொரு குறளில் வழங்கப்பட்டுள்ளது.

''***வினைக்குரிமை நாடியபின்னை அவனை***
அதற்குரிய னாகச் செயல்'' (குறள் 518)

எனும் குறளில், இப்பொருளே மேலோங்கி நிற்கிறது.

மற்றும் 'நாடாது', 'நாடாமை' எனும் சொற்கள் ஆராயாது, செய்வன தவிர்வன ஆராயாமை எனும் பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

''***நாடாது நட்டலிற் கேடில்லை***'' (குறள் 791)

''***நாணாமை நாடாமை நாரின்மை***" (குறள் 833)

இவ்வாறு பழைய தமிழில் 'நாடுதல்' எனும் சொல், 'தேடுதல்', தெரிதல், ஆராய்தல்' எனும் பொருள்களிலேயே பெருவழக்காகப்

பெருகியுள்ளது. ஆனால், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு முதல், 'விரும்புதல்' எனும் பொருளே முதன்மையிடம் பெற்று, பெருகிய வழக்காக இருந்து வருகிறது.

திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள ஆராய்ச்சி, ஆய்தல், தேர்தல் நாடுதல், எனும் சொற்கள், ஆராய்ச்சியின் நோக்கையும் போக்கையும் புரிந்து கொள்ள உதவுகின்றன. இக்கலைச் சொற்கள், இக்காலத்தில் ஆராய்ச்சியில் பின்பற்றப்படும் அணுகு முறைகளைப் பெரிதும் புலப்படுத்துகின்றன. இயல்புகளைக் கண்டு அறிதல் பயன்பாட்டை மதிப்பிடுதல் நுணுக்கமாகக் காண முயலுதல், தெரிந்தெடுத்தல், சீர் தூக்கிப் பார்த்தல், பரிசீலனை செய்தல் எனும் முறைகள் திருவள்ளுவரால் கோடிகாட்டப் பட்டுள்ளன.

நெறிமுறைகள்

பொதுவாக மனிதனுடைய 'ஆராய்ந்து பார்க்கும்' மன நிலையை வள்ளுவர் வளர்ப்பதற்கு முயன்றுள்ளார். தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் தோன்றிய அறிஞர்களுள் திருவள்ளுவர் தலையாய அறிவுமுதல்வாதியாகத் தோன்றுகிறார்.

உண்மையைத் தேடுவது

'உண்மையை அறிவதற்காகவும், பிறருக்கு அறிவிப்பதற்காக வும் செயயப்படுவதே 'ஆராய்ச்சி' என்பது இக்கால ஆராய்ச்சி இயலின் அடிப்படைக் கோட்பாடாகும்.

காட்சிப் பொருள், கருத்துப் பொருள் எனும் இருவகைப் பொருளின் பல்வேறு தன்மைகளை அலசி, ஆராய்ந்து அதன் உண்மையான இயல்பை அறிய முயலுவதே மெய்யான அறிவாகும் என்பது வள்ளுவர் கருத்து.

> *''எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்*
> *மெய்ப்பொருள் காண்பது அறிவு''* (குறள் 355)

எனும் குறட்பா, பொருளின் உண்மை இயல்பைக் கண்டறியுமாறு தூண்டுகிறது.

எந்தக் கருத்தை எவரெவர் எடுத்துச் சொன்னாலும் அந்தக் கருத்தின் உண்மையான கருத்தை அறிய முயலுவதே அறிவின் பயனாகும்.

> *''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
> *மெய்ப்பொருள் காண்பது அறிவு''* (குறள் 423)

இவ்விரு குறட்பாக்களும் ஒரு பொருளின் உண்மை இயல்பினையும், ஒரு கருத்தின் உண்மை இயல்பையும், தோற்றத்தையும் கூறுவோரையும் கண்டு மயங்காது, ஆராய்ந்து அறிய வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன, 'எதிலும் உண்மை காண்பதே நோக்கமாக இருக்க வேண்டும்' என்பது இவற்றால் பெறப்படுகிறது.

நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து

'எந்தப் பொருளாக–கருத்தாக இருந்தாலும் முதலில் அதன் நற்பண்புகளை ஆராய்ந்து அறிய முயல்க! பிறகு அதன் குற்றங் குறைகளை - தீய பண்புகளைக் கண்டு அறிக! பின்னர் அவ் விரண்டனுள் எது மிகுதியாக இருக்கிறதோ அதனைக் கருத்தில் கொண்டு, அப்பொருளின் - கருத்தின் - நன்மை தீமைகளை, சிறப்பு சிறப்பின்மையை மதிப்பிடுக!' என்பது திருவள்ளுவர் தெளிவுறுத்தும் செய்தியாகும்.

''குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'' (குறள் 504)

ஆராய்ச்சி என்பது வெறும் போற்றுதலாகவோ, வெறும் தூற்றுதலாகவோ அமையக்கூடாது. அளவுகடந்த போற்றுதலும், அளவு கடந்த தூற்றுதலும் பேரீடுபாட்டையும் பற்றையும், கடுமை யான வெறுப்பையும் வெளிப்படுத்தும். இவ்வாறு இரு எல்லை களுக்குச் சென்று ஆராய்ந்தால், உண்மை புலனாகாது. எனவே சிறப்பையும், சிறப்பின்மையையும், நன்மை தீமைகளையும் கண்டறிந்து, அவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து அதன் பின்னர் பெரும்பான்மையாக இருப்பது யாதோ, அதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியாளன் அப்பொருளைப்பற்றி—கருத்தைப்பற்றி ஒருமுடிவிற்கு வருதல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் துணிவுரையாகும்.

இதற்குத் தேவைப்படுவது பற்றற்ற-தற்சார்பற்ற மனநிலை (objective outlook) யாகும். இதனைத் திருவள்ளுவர் நன்கு எடுத்துரைத்துள்ளார்.

திருக்குறள் வாழ்வியல் நூலாக விளங்குவதனால், மனித வாழ்க்கை வலிவும் பொலிவும் பெறுவதற்குத் தேவையான நெறி முறைகளைத் திருவள்ளுவர் வகுத்துரைத்துள்ளார். இத்தகைய சிந்தனைப் போக்கின் இடையே, 'உண்மை காணும் வேட்கையே' முனைப்பாக இருக்க வேண்டும் என்பதை அவர் நன்குணர்ந் துள்ளார். இதனால், 'அறிவியல்' சிந்தனைக்கு அடித்தளமான

இரு நட்பு

அமுத. இளவழகன், பி. லிட்., பி. எட்.,
குருகுலம்.

''எல்லாப் பொருளும் இதன்பால் உள'' என்ற மெய்ப்புகழ் பெற்றது, திருக்குறள் ஏன்ற இடமெல்லாம் எல்லாப் பொருளை யும் சொன்ன புலவர், ஒரே பொருளைப் பல இடங்களிலும் சொல்லி யிருக்கிறார். அந்த வகையில் 'உடல் – உயிர் – நட்பு' பற்றிய செய்தி யினை இரண்டு இடங்களில் காணமுடிகிறது. அந்த இரண்டன் இணைப்புச் சிந்தனை இங்கே வடிவம் கொள்கிறது.

நிலையாமை பற்றிக் கூறவந்தவர்

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்று அந்த நட்பைக் கூறுகிறார்.

காதல் சிறப்புறைக்குமிடத்தும்

"உடம்போ டுயிரிடை அன்ன மற்றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு"

என்று அதே நட்பைக் கூறுகிறார்,

கூட்டை விட்டுவிட்டுப் பறவை பிரிந்து பறந்துவிடுவது போல உடம்பை விட்டு உயிர் பிரிந்துவிடும். இதுவே உடல்-உயிர்–நட்பு என்பது நிலையாமைக் குறளின் பொருள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்ப்பதற்கு வள்ளுவர் முயன்றுள்ளார். எனவே, இந்த முயற்சிக்கு உதவக் கூடிய கருத்துகளை நூலின் பலபகுதிகளில் பரவலாக அவர் அமைத் துள்ளார்.

அக்கருத்துகளைத் தொகை வகைப்படுத்தி, ஒரு கோவையாக்கி, நம் சிந்தனைக்கு உரமாக அமையும் வகையில், எண்ணத்தில் எழுச்சியூட்டும் முறையில், "திருவள்ளுவர் வகுத்த ஆராய்ச்சி நெறிமுறைகள்'' இங்குக் கோடி காட்டப்பட்டுள்ளன. இந்தக் கண்ணோட்டத்தில் நம்முடைய ஆராய்ச்சிகளை அமைப்போ மானால், அவை செறிவும், தெளிவும் உடையனவாக விளங்கும்.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பே மடந்தைக்கும் தலைவனுக்கும் உள்ள நட்பு என்பது அடுத்த குறளின் பொருள்,

முதல் பாடலில் நிலையாமையை வலியுறுத்துகின்றார். ஆகலின் யாக்கை நிலையாமையை அடிப்படையாகக் கொண்டு உயிர் உள்ளவரையே உடல் இருக்கும் என்பதை விளக்குகிறார். அதன் வழி உயிர்,உடலுடன் இணைந்திருக்கும் நட்பு நிலையற்றது என முடிவு காட்டுகிறார்.

அடுத்த பாடலிலோ தலைமக்கள் இடைநிலவும், இணையற்ற நட்பைச் சொல்கிறார். இந்த இப்பிறவிக்கு இனியொரு மாதரைச் சிந்தையாலும் தொடாத* செம்மை மிக்க தலைவன் – 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என்கணவனையானர்கியர் நின் நெஞ்சு நேர்பவளே'** என வாழும் தலைவி - இவர்களுக்கிடையே உள்ள உயர் நட்பு பற்றிச் சொல்கிறார். அப்போதும் 'உடம்போடு உயிரிடை அன்ன' என்று, உடலுயிர் நட்பையே உவமை காட்டு கிறார்.

முன் பாடலில் உடலுயிர் நட்பு நிலையற்றது என்றவர் அடுத்த பாடலில் நிலைத்த உறவுக்கு அந்த நட்பை உவமை காட்டுவது பொருந்துமா? என்ற ஐயம் எழுவது இயல்பன்றோ !

மேற்போக்காக நோக்குமிடத்து இரண்டின் இடையில் ஏதோ முரண் இருப்பதாகத் தோன்றினும் நுணுகி நோக்கினால் நுண்பொருள் தெரியும்.

ஆம்! உடல்-உயிர்-நட்பின் இரு நிலைகளை இரு பாடலிலும் சொல்லியிருக்கிறார். 'நட்பு' என்ற பொதுப்பெயரில் இரு உயிர் இயல்புகளைக் கூறியுள்ளார்.

உயிரானது எக்காலத்தும் உடலைச் சேர்ந்தே இருக்காது என்றாவது ஓர் நாள் — உரிய காலம் வரும்போது உடலில் இருந்து நீங்கிவிடும். தத்துவநோக்கில் சொன்னால் உயிர்,பக்குவம் அடையும் வரை தங்கியிருக்கும் சாதனமாகவே உடல் உள்ளது. இருவினை ஒப்பு — மலபரி பாகம் கிடைத்தால் உயிர் உடலை விட்டு ஓடிவிடும். இந்த உயிரியல்பையே முதற்பாடலில் கூறுகிறார்.

உயிர் உடலோடு உரிய காலம் வரையே இருக்கும் என்றாலும் அந்தக் காலத்தில் அதன் நிலை மிகச் சிறப்பானது. உடலின்

---

* கம்பராமாயணம்.

** குறுந்தொகை - 49.

ஷெய்கு முகம்மது பாவலர்

ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்களின் குடும்பத்தினர்கள்

புலவர் அறிமுகம்

தமிழ் உலகுக்கு நம் செந்தமிழ் நாட்டில் பல புலவர்களும் அறிஞர்களும் பழங்காலத்தில் அளப்பரிய தொண்டுகள் பல ஆற்றி யுள்ளனர். ஆனால் அவற்றில் பல வெளி உலகுக்குத் தெரியாமல் பழஞ்சுவடிகளாகவும், ஏடுகளாகவும் மறைந்து அழிந்து, மக்கி விட்டன. இதே நிலை இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கும் ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே. எத்தனையோ இஸ்லாமிய தமிழ்ப் புலவர்களும், கவிஞர்களும் தமிழுக்காகவும், இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காகவும் சேவை செய்திருந்தும் அவர்களின்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு அசைவுகளுக்கும் அடிப்படை உயிரே. உடலின் இன்ப துன்பங்கள் உயிரையே சென்றடைகின்றன. உடலியக்கங்கள் யாவுக்கும் மூல காரணமாக நின்று விளங்குவது உயிரே. உயிரை யறியாது ஒரு செயலையேனும் செய்தல் உடலுக்கு ஆகாது. அந்த அளவுக்கு உடலுடன் உயிர் மிக நெருக்கமாக இணைந்திருக்கும். இது உயிரின் வேறொரு இயல்பு. இதையே உமாபதி சிவமும்

" ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே " *

என்று கூறுவார்.

இதுபோலவே தலைமக்கள் இணைந்திருப்பர் என்று அடுத்த பாடலில் கூறுகிறார்.

ஆகவே முடிவாக நோக்குமிடத்து இரு குறட்பாவிலும் இரு வேறு உயிரியல்புகளைக் கூறியுள்ளார், என்பது தெரிகிறது.

1. உயிர் உடலிலேயே இருப்பதில்லை.
2. இருக்கும் சிலகாலமும் இணக்கமாக இருக்கும் என்ற

இரண்டுமே அவ்வியல்புகள். இவற்றையே 'நட்பு' என நவின்றிருக் கிறார். நவில்தொறும் தானே நூல்நயம் கிட்டும். நாளும் படிப் போம் ! நயம்பல படைப்போம் ! !

---

* திருவருட்பயன் — 54

இலக்கியங்களும் கவித்திறனும், இஸ்லாமிய ஞானப்பாதையில் அவர்களின் புலமையும், இறையச்சமும், தொண்டும் வெளி உலகுக்கு அறிவிக்கப்படாமலேயே மறைந்துவிட்டன.

மேற்கண்ட நிலையில் உள்ள ஒன்றே இக்கவிதை நூலின் ஆசிரியரான மறைந்த மாமேதை ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்களின் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தொண்டும், இறை ஞானமும் மற்றும் கவித்திறனுமாகும். இவர்கள் நம் தமிழ்நாட்டில் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்த புலவராவார். தமிழ்க் கவிதைகளும், பாடல்களும் இயற்றுவதில் புலமையும் திறமையும் வாய்ந்தவர்களாக வாழ்ந்துள்ளார்கள். புலவர் அவர்கள் தாம் இயற்றிய அனைத்துக் கவிதைகளையும் தொகுத்து அதற்கு **"திருநெறித் திரட்டு"** எனப் பெயரிட்டு தன் வீட்டில் வைத்துச் சென்றுள்ளார்கள் இத்தொகுப்பிற்குச் சிறப்புப் பாயிரமும் சாற்றுக் கவிகளும் அக்காலத்தில்தமிழ் நாட்டிலும்,யாழ்ப் பாணத்திலும் வாழ்ந்த பல பெரும் புலவர்களும், சமஸ்தான வித்வான்களும்,அஷ்ட்டாவதானிகளும் வழங்கியுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுமார் எண்ணூறு பக்கங்களைக் கொண்ட இக்கவிதை நூல் கையெழுத்துப் பிரதியாகவே இன்றுவரை பாவலர் அவர்களின் வீட்டில் அவர்களின் சந்ததிகளாகிய எங்களின் முன்னோர்களாலும் இன்று எங்களாலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது

இந்நூலில் அல்மர்ஹூம் ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்கள் இயற்றியுள்ள கவிகள் வருமாறு :

சர்வ வல்லமைமிக்க ஒரே இறைவனான அல்லாஹ் பேரிலும் புகழ்மிக்க இறைத்தூ தரும் அகிலத்தின் வழிகாட்டியுமான நமது அருமை நாயகம் முஹம்மதுநபி (ஸல்) அவர்கள் பேரிலும், பாக்தாத், ஞானகுரு மகான்களின் தலைவர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் பேரிலும், நாகூர் ஞானகுரு நாயகம் ஷாஹுல் ஹமீது பாதுஷா அவர்கள் பேரிலும், திருச்சி தப்ரே ஆலம் பாதுஷா நத்ஹர்வலி அவர்கள் பேரிலும், முத்துப்பேட்டை ஷேக்தாவூது வலியுல்லா அவர்கள் பேரிலும், பாப்பாவூர் ஷேக் அலாவுதீன் வலியுல்லா அவர்கள் பேரிலும் மற்றும் பல தமிழ்நாட்டு இறை நேயர்களான வலிமார்கள் பேரிலும் ''முனாஜாத்'' எனும் புகழ்மாலைகளுடன் கூடிய வேண்டுதல்களும். பிரார்த்தனைகளும், நோய் மற்றும் பிணி நீங்க இறைவேண்டல்களும் கொண்ட கவிதை களும், செய்யுட்களும், பாடல்களும் மற்றும் பொதுப்பாடல்களான

கும்மிப்பாட்டு, குறமகள்குறவஞ்சி, திருமணவாழ்த்துப்பா, சுபசோபனங்கள், சபைவணக்கம் மழைப்பெய்ய இறைவனை இறைஞ்சும்பத்து, கடிதகவிகள் மற்றும் பலவகைகவிகளைப் புலவர் அவர்கள் இயற்றியுள்ளார்கள்.

எங்கள் முன்னோர்கள் பலவாறு முயன்றும் குடும்பத்தின் பல சூழ்நிலைகளினால் இந்நூல் இதுவரை அச்சிடப்படாமலேயே இருந்துவிட்டது.அதனால் இவ்வரிய இஸ்லாமியத்தமிழ் இலக்கியப் பொக்கிஷம் இத்தனை ஆண்டுகளாக வெளிஉலகுக்குத் தெரியா மலேயே இருந்து விட்டது மிகவும் வருந்தத்தக்கதே.இறைவனின் உதவியைக் கொண்டு இனியாவது இதனை வெளிஉலகுக்கு அறிவித்துப் புலவர் அவர்களின் பணி முழுப்பயனை அடையச் செய்துவிட வேண்டும் என எண்ணியதன் விளைவாகவே இப்பெரிய "திருநெறிதிரட்டு" கவிதை நூலிலிருந்து ஒரு சிறிய பகுதியான இதனை 1973ல் வெளியிட்டோம். இது அல்லாஹ்வின் மீது பாடப் பட்ட புகழ்மாலைகளும், முனாஜாத்துகளும் அடங்கியது. அடுத்து ஒரு சிறுவாகம் 1979ல் வெளியிடப்பட்டது. இது நாகூர் ஷாஹுல் ஹமீது வலியுல்லா அவர்களின் பேரில் புலவர் அவர்கள் பாடிய முனாஜாத்தின் ஒரு பகுதியாகும். மூன்றாவது பாகமாக முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்களின் பேரில் பாடியுள்ள கவிதைகளை வெளியிட எண்ணி அதனை அச்சிடக்கொடுத் துள்ளோம். நமது ரசூலேகரீம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பேரில் பாடப்பட்டுள்ள பாடல்களும் கவிதைகளும் அடுத்து வெளியிட (சற்று பெரும்பகுதி) இன்ஷா அல்லாஹ் எண்ணியுள்ளோம்.

இதற்கென தனிட்ரஸ்ட்டோ, பண்டோ இல்லாத நிலையில் இறைவனையும் அவனது திருத்தூதரையும் நம்பி இந்நூலை அச்சிட்டு வெளியாக்கும் வேலையில் உறவினர்கள் மற்றும் நண்பர் களின் உதவியுடன் இறங்கியுள்ளோம். இந்நூல் எழுதப்பட்டு பல வருட காலமாகி விட்டதால் நூலின் தாள்கள் சேதமடைய ஆரம்பித்துவிட்டன.அதனால் இதனைத் துரிதப்படுத்த வேண்டியது அவசியமாகிவிட்டது.

எல்லாம் வல்ல இறைவன் "திருநெறிதிரட்டு" முழுதும் அச்சிடப்பட்டு வெளிவர போதிய உடல் பொருள் உதவியைத் தந்தருள்வாராக — ஆமின்.

(இதனை அச்சிட எந்த ஒரு சமூகசேவை நிறுவனமோ அல்லது நற்பணி மன்றங்களோ அல்லது ட்ரஸ்ட்டோ முன் வந்தால் அதனை வரவேற்கின்றோம்.)

புலவர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு :

அல்மர்ஹூம் ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்கள் கி. பி. 1855 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர்க்கு அருகிலுள்ள அடியார்க்கமங்கலம் (அடியார்க்கு மங்கலம் என்பதின் திரிபு) என்னும் ஊரில் பிறந்தார்கள். அங்கு இருந்த தமிழ்ப்பள்ளியில் 4 ஆவது வகுப்புவரை படித்தார்கள். இயற்கையாகவே இறைஞானத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாகவே இருந்தார்கள். இறைவனின் உதவியைக் கொண்டு இவர்களுக்குத் தமிழ்க்கல்வி அறிவு வளர்ந்தோங்கி வந்தது. சிறுவயதிலேயே தமிழ்க்கவிதை நூல்கள் பலவற்றையும் வாங்கிப் படிப்பார்கள். (இந்நூல்கள் இன்றும் புலவர் அவர்கள் வீட்டில் உள்ளன). அக்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் பலரின் நெருங்கிய நேரடித் தொடர்பு இந்நூலாசிரியருக்கு இருந்து வந்தது. முக்கியமாக நாகூர் குலாம்காதர் நாவலர், கோட்டாறு புலவர்கள், தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி தமிழ்க்கவிமன்றத்துப் புலவர்கள், யாழ்ப்பாணப் புலவர்கள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. **நாகூர் "சீரிய சங்கத்து வித்வான்சபை" உறுப்பினராக புலவர் அவர்கள் இருந்தார்கள்.** புலவர் அவர்களிடம் சாற்றுக் கவி வாங்க தமிழ்நாட்டுப் புலவர்கள் பலர் அவர்களுடைய வீட்டிற்கு வந்து போவது சர்வசாதாரணமாக நிகழ்ந்து வந்தது.

இறைவனின் கிருபையால் இளமையிலிருந்தே கவியாற்றும் திறனைப்பெற்று வந்ததால் தக்கவயது வந்தபோது கவிபுனைய ஆரம்பித்தார்கள். அவ்வப்போது இறைஞானத்தில் மூழ்கிய நிலையில் மடைதிறந்த வெள்ளம் போல கவிதைகள் அவர்களிடமிருந்து இயற்கையாக வெளியாகும். உதிப்பில் வெளியாகும். உதிப்பில் வெளியாகும் இக்கவிதைகளை புலவர் அவர்களோ அல்லது அவர்களின் புதல்வர்களோ அருகில் இருந்து உடனுக்குடன் சிறுசிறு கையேடு அல்லது துண்டுத்தாள்களில் அல்லது சிலசமையம் சுவரில் கூட எழுதிவைப்பார்கள். பிறகு அதனை ஒழுங்குபடுத்தி தொகுத்து நோட்டில் எழுதுவார்கள். புலவர் அவர்கள் எங்கு சென்றாலும் கையில் கையேட்டுடனேயே செல்வார்கள். நடு இரவிலும் திடீரென விழித்துப் பாடல் எழுதுவது அவர்களின் வழக்கம். பகலிலும் இரவிலும் வீட்டில் தனித்திருந்து இறை வழிபாட்டில் அதிகம் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். எப்போதும் எதையோ சிந்தித்தவர்களாகவே அவர்கள் காணப்படுவார்கள்.

பாவலர் **ஷெய்கு முஹம்மது அவர்களுக்கு இஸ்லாமிய ஞானப் பாதையில் அதிக தொடர்பு இருந்தது.** அடியக்கமங்கலத்தில்

அவர்கள் காலத்தில் வாழ்ந்த மஸ்தான் சாஹிப் என்ற நூறுல்லாஷா காதிரி (இவர்களைப் புலவர் அவர்கள் ''உபாத்தி'' என தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்கள்) என்பவர்களுடனும், மௌலானா பாவா என அழைக்கப்படும் செய்யது அஹமது வலியுல்லா அவர்களுடனும் மிக நெருங்கிய அகமிய விளக்கத் தொடர்பை வைத்திருந்தார்கள். இவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் பல வற்றில் தரீகா மற்றும் மகரிபா சம்மந்தப்பட்ட சூட்சம வார்த்தைகள் பல இருப்பதைக் காணலாம். புலவர் அவர்கள் தனது இறுதிக் காலத்திற்கு முன்பாகவே தன்னுடைய இரண்டாவது புதல்வர் முஹம்மது எஹியா சாஹிது (அல்மர்ஹூம்) என்பாருக்கும் மூத்த புதல்விக்கும் பைஅத் எனும் உடன்படிக்கை மூலம் மெஞ்ஞான (அகமிய) விளக்கத்தை கொடுத்தார்கள். இதிலிருந்து புலவர் அவர்கள் தன்னை ஒரு மெஞ்ஞானி என்றோ அல்லது விலாயத் பெற்ற நபர் என்றோ வெளிக்காட்டிக் கொள்ளாமலேயே வாழ்ந்து மறைந்து விட்டார்கள் என்பது புலனாகின்றது. முஹம்மது எஹியா சாஹிது அவர்களும் பல கவிதைகளை இயற்றியுள்ளார்கள்.

கவிபுனைவதோடல்லாமல் புலவர் அவர்கள் குடும்ப வாழ்க்கையிலும் தொழில் துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். தக்க வயதில் திருமணம் முடிக்கப்பட்டு முதல்தாரத்தின் மூலம் ஒரு பெண் மகளையும், முதல் தாரத்தின் மறைவிற்குப் பிறகு இரண்டாம் தாரத்தின் மூலம் ஆறு ஆண் மக்களையும் மூன்று பெண் மக்களையும் பெற்றெடுத்தார்கள். மலேயாவில் பினாங்கில் அப்போது இருந்த பூர்வீக ஜவுளிக்கடைத் தொழிலையும் இடையிடையே அங்கு சென்று நடத்தி வந்தார்கள். சுமார் 20 ஆண்டு காலம் அத்தொழிலை இவர்களே நேரிடையாக கவனித்து வந்தார்கள்.

ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்கள் தன்னை ஊர் மக்களின் பொதுத் தொண்டிலும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். உள்ளூர் மற்றும் சுற்று வட்டாரப் பொதுமக்களால் மிகுந்த கண்ணியத்திற்கும், மரியாதைக்கும், நம்பிக்கைக்கும் உரியவராகவும், தனிப்பட்டவர்களின் மற்றும் பொதுப்பிரச்சினைகளிலும் நியாயத் தீர்ப்பு செய்து வைக்கக் கூடியவராகவும் கருதப்பட்டு வந்தார்கள். அப்போது முஸ்லீம்கள் சிறுபான்மையினராய் இருந்த அடியக்கமங்கலத்தில் ''முஸ்லிம்முஹல்லா ஜமாத்'' அமைப்பை ஏற்படுத்தி சட்ட திட்டங்களை வகுத்து ஊரின் முதல் நாட்டாண்மையாகவும், பள்ளிவாசலின் முதல் மூத்த வல்லிலாகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் இறுதிக் காலம் வரை இப்பதவியில் இருந்து சேவை செய்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'குற்றியல் உகரமும் அற்றென மொழிப' — என்ற காப்பியர் நூற்பாவிற்கு உரிய இடம் யாது?

வை. தங்கமணி

ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியர் தந்த தொல்காப்பியத்தின்படி தமிழ் மொழிக்கே உரிய எழுத்துகள் சார்பு மூன்றினையும் சேர்த்து முப்பத்தி மூன்று. இவைகளில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் இருப்திியிரண்டு. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் இருத்திநான்கு ஆக நாற்பத்தாறு எழுத்துகள். இந்த நாற்பத்தாறும் மொழிமுதலும், இறுதியுமாக வந்தாலும் மேலே கூறிய முப்பத்து மூன்றில் அடங்கும் என்பார். இவைகளுள் உயிர், மெய், சார்பு,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாவலர் அவர்கள் 1920 ஆம் ஆண்டு ஸபர் மாதம் பிறை 72 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு இறையடி சேர்ந்தார்கள் (இந்நாளில் ..) **அவர்கள் வாழ்ந்த வீடு இன்றுவரை ''பாவலர் வீடு" என்றே அழைக்கப்படுகிறது**

பாவலர் அவர்கள் கூறிச்சென்ற அறிவுரைப்படி அவர்களின் மூத்த மகனார் வி. ஏ. எஸ். அப்துல் அஜீஸ் (அல்மர்ஹூம்) அவர்கள் 1932 ல் இயற்றிக் கொடுத்த ஊர் நிர்வாக சட்ட திட்டங்களே இன்றுவரை அடியக்கமங்கலத்தின் முஸ்லிம் ஜாமத்தின் நிர்வாகம், மற்றும் தர்ம பரிபாலன சட்டதிட்டமாக கட்டுக்கோப்பாக நடைமுறையில் இருந்து இயங்கி வருகிறது என்பது இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இதனைப் படிக்கும் அன்பர்கள் மறைந்த மாமேதை ஷெய்கு முஹம்மது பாவலர் அவர்களின் கனவை நினைவாக்கி அவர்களின் பணிதமிழ் உலகிற்கும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கும் கிடைக்கச் செய்ய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுமாறும், முழுநூலும் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட பிரார்த்திக்குமாறும் வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் குடும்பத்தின் ஒளிவிலக்காகிய புலவர் அவர்களின் பொருட்டால் இறைவன் எங்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து கருணை புரிவானாக...ஆமின்.

உயிர்மெய் என்றெல்லாம் பிரித்துக் காட்டினாலும், மொழிமுதல், மொழி இறுதி ஆகியவற்றில் வரும் எழுத்துகளை மெய், உயிர் ஆகிய இரண்டுமாகவே கருதுவர். நிறுத்தச் சொல்லின் ஈறோ அல்லது குறித்து வருகிளவியின் முதலோ உயிர்மெய்யாகக்கூட இருந்தாலும் தொல்காப்பியர் அவற்றை உயிர் மெய்யாகக் கருதி எங்கும் விதி செய்துள்ளதாக யாண்டும் காணக் கிடைத்தில.

நிறுத்தச் சொல்லின் ஈறாயின் உயிராகவும், குறித்து வருகிளவியின் முதலாயின் மெய்யாகவும் கருதுகிறார்.

இதோ :

'மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலாகு இருப·து
அறு நான்கு ஈற்றோடு நெறி நின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர் என்று ஆயீரியல' (புணரியல் : க)

எடுத்துக்காட்டு :

பால் : ப் + ஆ + ல் :
மெய் முதல், மெய் ஈறு.
ஆல் : ஆ + ல் :
உயிர் முதல். மெய் ஈறு.
பல : ப் + அ + ல் + அ :
மெய் முதல், உயிர் ஈறு.
ஆலை : ஆ + ல் + ஐ :
உயிர் முதல், உயிர் ஈறு.

இவ்வாறாக இருவகையாகக் கொள்வர். இவ்வாறாகப் பொது விதி கூறியவர் சிறப்பு விதியாக :

'அவற்றுள்;

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' - புணரியல் 2

முற்கூறிய மெய்முதல், மெய்ஈறு, உயிர்முதல், மெய்யீறு, மெய்முதல் உயிரீறு, உயிர்முதல், உயிரீறு என்பவற்றுள் நிறுத்தச் சொல்லின் ஈறுபுள்ளிபெற்றே நிற்கும்.

குறித்து வருகிளவியின் முன் மெய் வருவதில்லை. ஏன்? முன்னர் மொழிமரபு இருபத்தி எட்டாம் நூற்பாவில் 'உயிர்மெய் அல்லன மொழி முதலாகா என்று கூறி இருப்பதால் என்றறிக.

இளம் பூரணர் இந்நூற்பாவிற்கு மேல் மெய்யும், உயிரும் என்று கூறிய இரண்டனுள் மொழிக்கு ஈறாய மெய்யெல்லாம் புள்ளி பெறுதலோடு நிற்கும் முதலாயவையெல்லாம் புள்ளி இழந்து நிற்கும்; என்று கூறி :

'மரம்; என்ற எடுத்துக் காட்டுத் தந்து; மேலும்; மொழி முதன் மெய் புள்ளியொடு நில்லாதென்னாது, ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல் என ஈற்றின் மேல் வைத்துக் கூறிய வதனான். அவ் வீற்றின் மெய் உயிர் முதன் மொழி வந்தவிடத்து அஃது ஏற இடங்கொடுக்கும் என்பது பெறப்பட்டது' என விளக்குவர்.

தொல்காப்பியர் சொல்லின் முதலைச் சொல்லாது இறுதி யினையே எண்ணிச் சொல்லும்போது; இறுதி புள்ளி பெறும்; ஆனால் முதல் புள்ளி இழந்து நிற்கும். இறுதி புள்ளி உயிர் வந்தால் ஏற இடங்கொடுக்கும் என்று கூறுவது எனக் கொண்டால் அடுத்து வரும்,

'குற்றியல் உகரமும் அற்றென மொழிப
உயிர்மெய் ஈறு உயிரீற்றயற்றே'

என்ற நூற்பாக்களுக்கு எவ்வாறு பொருள் கொள்வது:

'அவற்றுள்,

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்ற நூற்பா இறுதியன்றி முதலையும் சுட்டும் என்றால் காப்பியர் 'உயிர்மெய் ஈறு உயிரீற்றுயற்றே' என்று மீண்டும் இறுதியைச் சுட்டியிருக்க வேண்டாமே? காப்பியர் போக்கே தனிப் போக்கல்லவா? ஓரிடத்தில் இறுதியைச் சொன்னால் பிறிதோர் இடத்தில் முதலைச் சொல்லும் வழக்குடையவர் அல்லவா? அவ்வாறிருக்க மேலே கூறிய 'குற்றியல் உகரமும் அற்றென மொழிப' என்ற நூற்பாவிற்கு; மொழி ஈற்றுக் குற்றியல் உகரம் புள்ளி பெற்று உயிர் ஏற இடங்கொடுக்கும், மொழி முதல் குற்றியல் உகரம் புள்ளியிழந்து காணப்படும் என்று தானே பொருள் கொள்ள வேண்டும். ஏன்? இந்நூற்பா மாட்டேற்றலல்லவா? அதனோடு புள்ளியிழந்த குற்றியல் உசரம் என்ற ஒன்று உண்டா? இவ்வினா எழாதா?

குற்றியல் உகரம் புள்ளி பெறும் என்றால் முன்னர் சார்பு எழுத்துகளைச் சொல்லும் போது,

அவை தாம்,

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்

என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன, என்ற நூற்பாவிற்கு இளம் பூரணர் கூறிய உரையும் 'சந்தனக்கோல் குறுகியவிடத்தும் பிரம்பங்கோல் ஆகாது' என்று உவமை கூறி சார்புக்கு விளக்கம் தந்ததற்கும் முரணாக இல்லையா? முன்பு ஒரு நூற்பாவிற்கு ஒரு வித உரையும் பின் அதே கருத்துடைய நூற்பாவிற்கு பிறிதோர் உரையும் கூறுவது உரையாசிரியருக்கு உகந்ததுதானா?

குற்றியல் உகரம் புள்ளி பெறும் என்று காப்பியர் கருதி யிருப்பாரே யானால் — பின்னால் எழுத்துக்களுக்கு 'வடிவம்' கூறு மிடத்தாவது கூறியிருக்கமாட்டாரா? மகரத்தின் வடிவம் கூறு மிடத்து:

'உட்பெறு புள்ளி உரு வாகும்மே'

என்றும், மெய்யின் வடிவம் கூறுமிடத்து:

'மெய்யின் இயற்கைப்புள்ளியொடு நிலையல்'

என்றும்,

எகர ஒகரத்தின் வடிவம் கூறுமிடத்து:
'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே',

என்றும், உயிர்மெய்யின் வடிவம் கூறுமிடத்து:

'புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருபு திரிந்து உயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே'

இவ்வாறு மகரத்திற்கும், மெய்க்கும், எகர ஒகரத்திற்கும், உயிர் மெய்க்கும் வடிவம் கூறியவர்-குற்றியல் உகரத்திற்கும் தனிவடிவம் உண்டெனின் கூறாது விடுவாரா? என்றால் குற்றியல் உகரம் அளவால் குறைவே தவிர வடிவால் வேறுபாடில்லை என அறியலாம் அல்லவா?

'குற்றியல் உகரமும் அற்றென மொழிப'

என்ற நூற்பாவிற்கு மேதகு பாவாணர் அவர்கள் இந்நூற்பா 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்ற நூற்பாவிற்குப் பின் நிற்பதால் இஃது மாட்டேறு' ஆகையால் குற்றியல் உகரமும் மெய்யீறு போலப் புள்ளி பெறும் என்பதே போந்த பொருளாம். 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்', — எகரஒகரத் தியற்கையு மற்றே', — என்று ஆசிரியர் மாட்டியவிடத்தும் 'எகர ஒகரம்' புள்ளி பெறும் என்பதே கருத்தாதல் தெளிவாம். ஆதலால், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'குற்றியல் உகரம்

புள்ளி ஈறு போல உயிரேற இடங்கொடுக்கும் என்று உரை கூறுவது மாட்டேற்றுக்கு முற்றிலும் பொருந்தாது. இதுவே பேராசிரியருக்கும் சிவஞான முனிவருக்கும், சங்கயாப்புடையாருக்கும் கருத்தாம் என்று' கூறியுள்ளார்.

பாவாணர் கூற்று என்ன? உயிர்ஏற இடந்தரும் என்று கூறுவது தவறாகும். மெய்போலக் குற்றியல் உகரமும் புள்ளி பெறும் என்று தொல்காப்பியர் தாம் எழுதிய காப்பியத்தில் எங்கேனும் நூற்பா செய்துள்ளாரா? இல்லையே! அவ்வாறிருக்க காப்பியர் எண்ணத் திற்கு ஏற்புடைத்தல்லாத உரைவகுத்தல் உகந்ததுதானா?

'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்'
உயிர்மெய் ஈறும் உயிரீற்றியற்றே'

என்று முன்னும் பின்னும் ஈற்றினையே சுட்டுவதால் காப்பியருக்குச் சொல்லின் ஈற்றினைக் கூறுவதுதான் நோக்கம் என்று கூறி முன்னவர் உரைகளை யெல்லாம் மறுப்பதாயின் இவ்விரு நூற் பாக்களுக்கும் இடைநிற்கும் 'மாட்டேறு' நூற்பாவான' குற்றியல் உகரமும் அற்றெனமொழிப' என்ற நூற்பா இவைகளின் இடை யிலேயே நிறுத்தப்பட்டால் மீண்டும் தவறு நடந்துவிடும் அன்றோ? என்றால் அந்நூற்பாவிற்கு உரிய இடம் யாது?

'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்
உயிர்மெய்யீறும் உயிரீற்றியற்றே'

'குற்றியல் உகரமும் அற்றென மொழிப' என்று இடம் மாற்றி ஒழுங்கு படுத்துவோமானால் :

குறித்து வருகிளவி முதலில் மெய்வருதல் இல்லை. ஏன்? உயிர் மெய் அல்லன மொழி முதலாகா' என்று முன்னர் கூறியதாலும், மொழி முதல் வரும் எழுத்து மெய்ப்புள்ளி இழந்துவிடும். ஆனால் நிறுத்தச்சொல் இறுதி புள்ளி பெற்றே நிற்கும். ஆகவேதான் 'புள்ளியொடு நிலையல்' என்று சிறப்பித்துக் கூறினாரேயன்றி 'மெய்யின் இயற்கைப் புள்ளியொடு நிலையல்' என்ற நூற்பா விற்குக் கூறியது கூறல் ஆகாது என்றால் உயிர் மெய் எவ்வாறு ஈறாகும் என்ற வினா எழாதா? எழும் 'உயிர் மெய்' ஈறு உயிர் ஈறாகவே கருதப்படும் என்பர்.

பின் 'குற்றியல் உகரமும் அற்றென மொழிப' — என்றால் 'குற்றியல் உகரமும் உயிர் ஈறாகவே கருதப்படும்' என்று கொண்டால் இந்த மாட்டேற்று நூற்பாவிற்குப் பொருள் பொருத்த மாக அமைவதைக் காணலாம். முன்னர் சார்பு கூறியவிடத்து

தொல்காப்பியம் கூறும் எழுத்து வடிவம்

(ஆய்வுக் கட்டுரை)

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

பாயிரம் :-

தொல்காப்பியத்தை நினைக்குங்கால் பல்வேறு எண்ணங்கள் அறிஞர், ஆய்வாளர், உரையாளர் தம் கருத்துக்கள் என் சிந்தையை மொய்க்கின்றன.

தொல்காப்பியர் தமிழரா ஆரியரா? தென்னரா வடவரா? சமணரா பவுத்தரா வைதிகரா? ஒருவரா பலரா? கி. முவினாரா— கி. பியினரா? இயற்பெயரா சிறப்புப் பெயரா? தொல்காப்பியம் முதனூலா வழிநூலா சார்புநூலா மொழிபெயர்ப்பு நூலா? ஒரே காலத்திற் செய்யப்பட்டதா காலந்தொறும் சேர்க்கப்பட்டதா? சிதைவுண்டா சிதைந்தவை செப்பனிடப்பட்டுள்ளதா? இடைச் செருகல் உண்டா? திருத்தப்பட்டுள்ளதா? ஒருவர் செய்ததா பலர் செய்ததா? தொகுப்பு நூலா? இப்படிப் பல ஆய்வுரைகள் ஐயவுரைகள் மேலும் தொல்காப்பியர் என ஒருவரில்லை அஃதொரு ஒழுக்கநூல் வரலாற்றுநூல் என்னும் விருப்புரைகல் உள.

இவை பற்றி என் கருத்தாக யாதொன்றும் கூறாமல் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தை மட்டும் நினைவுபடுத்தி மேற்கூறுவேன். அஃதாவது

தொல்காப்பியம் ஏறக்குறைய 1610 நூற்பாக்களைக் கொண்ட 27 இயல்களும் மூன்றதிகாரமுமாக அமைந்துள்ளதொரு இயற்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இளம் பூரணர் உரையும், சந்தனக் கோல் குறுகியவிடத்தும் பிரம் பங்கோல் ஆதல் இல்லை' என்ற உவமையும், எகர ஒகரத்தியற் கையும் அற்றே என்ற மாட்டேற்று நூற்பாவிற்குக் கூறியஉரையும் பொருந்துமாற்றினையும் காணலாம்.

குறிப்பு : இக்கட்டுரை என்னால் எழுதப்பட்டது என்பதனை இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

றமிழ் இலக்கணநூல். இன்றைக்குள்ள நூல்களில் தொன்மை யானது ; முதன்மையானது ; முழுமையானது. பாட்டுந் தொகையு மாகிய சங்க இலக்கியங்கட்கு இலக்கண அளவையாக இருப்பது என்பதேயாம்.

இனி இந்நூலைப்பற்றி எழுந்துள்ள உரைகளுள் இளம்பூரணர் அல்லது உரையாசிரியர் உரையே முந்தியது; நூல் முழுமைக்கும் உள்ளது, அதன்பின் சேனாவரையர், தெய்வச்சிலையார் பேராசிரியர் கல்லாடர் நச்சினார்க்கினியர் முதலானோர் உரைகள். இவை யாவும் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முந்தியவை – பிந்தியவற்றுள் குறிப்பிடத்தக்கவை சிவஞானமுனிவர் பாயிரவுரை முதற்சூத்திரவுரை. அதன்பின் அரசஞ்சண்முகனார் – நாவலர் சோமசுந்தரபாரதியார், பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார். வேங்கடராசுலுரெட்டியார் இவர்கள் சில பகுதிகட்குச் செய்த வுரைகள்.

ஆய்வுரை தொகுப்புரைகள் பலவுள. குறிப்பிடத்தக்கவை எசு. வையாபுரிப்பிள்ளை, இரா. இராகவையங்கார், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை முதலானோர் ஆய்வுரைகளும் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தொகுப்பாய்வுரைகளுமாம்.

இங்கே உரையாசிரியர் அல்லது இளம்பூரணர் உரைப்பற்றி எனது சிறிய கருத்தொன்றைத் தாழ்மையொடு தெரிவித்துக் கொள்கிறேன். அஃதாவது இற்றைக்குள்ள இளம்பூரணம் நக்கீரரின் களவியலுரையைப் போல —

கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பயிலப் பெற்று வந்து பதினோராம் நூற்றாண்டு இறுதியில் பதிவு செய்யப் பெற்றிருக்க லாம் என்பது என் கருத்து. சமண - பவுத்த சமயப் பேரறிஞர் களாலும் துறவியராலும் தென்னகத்தில் அமைக்கப்பெற்ற சங்கங்கள் சமய நோக்கொடு கல்வித் தொண்டுகள் ஆற்றி வந்துள்ளன. இவற்றினின்று தோன்றியவை, அவிநயனார், மகேசுரனார், வாய்ப்பியனார் முதலானோரின் யாப்பிலக்கண நூல்களும் - பிற நூல்களும் ஆம் - அவற்றுள் ஒரு கல்விக் கழகத்தின் தலைவராக அமர்ந்து தொல்காப்பிய உரைகண்டவர் இளம்பூரணர், அவர் உரையே வழிவழியாகப் பயிலப் பெற்று வந்திருத்தல் வேண்டும். இக்கருத்து அவ்வுரையுள் காணப்பெறும் சில தடையங் களாலும் பின் வந்த உரையாளர்களின் கூற்றுக்களாலும் தோன்றியதே தவிர வரன்முறையாக ஆய்ந்து முடிவு செய்யப்பட்ட தன்று. இம்முறையில் ஆராயின் பல உண்மைகள் கிட்டும் என்பது என் கருத்து.

இனி,தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு பின் எழுந்த நன்னூல், நேமிநாதம், நம்பியகப்பொருள் விளக்கம் யாப்பருங்கலம் முதலான நூல்களும் புடைநூலாக எழுந்த வீரசோழியமும் பிறவும் தமிழ்மொழி இயல்பும் தொல்காப்பிய மரபும் ஓர்ந்து செய்யப் பட்டவையல்ல என்பது என் கருத்து. உரைகளும் ஐம்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அவ்வகையைச் சார்ந்தனவே. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆய்வுரைகட்கும் இது பொருந்தும்.

எனவே தமிழ் மரபொடு அறிவியலுக்குப் பொருந்தத் தொல் காப்பியத்தின் கருத்தைத் தெரிந்துணர அவாவி முப்பது ஆண்டுக ளாக யான் கண்டவற்றுள் எழுத்திலக்கணத்துள் எழுத்து வடிவம் பற்றிய ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

நோக்குரை:-

எழுத்ததிகாரத்திற்கு(மொழியியலார் ஆய்வுரைகள் நீங்க) இளம் பூரணம் முதல் இதுகாறும் வந்துள்ள உரைக்கோட்பாடுகள் கருத்து முரண்பாடுகள் ஒருபுறமிருக்கப் பாடத்திரிபுகளும்,ஏடெழுதுவோரால் நேர்ந்திருக்கலாம் என்னும் பிழைகளும் நூலாசிரியர் கருத்தையே திசைமாறச் செய்துள்ளன. அதனான் ஆங்காங்கே இது பற்றி ஆய்ந்துரைப்பதை மேற்கொள்ளாமல் நூல் முழுமைக்கும் ஒரு காண்டிகை உரை எழுதும் கடப்பாட்டிற்காளானேன்.

திரிபுற்ற பாடமாக யான் கருதுபவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். விளக்கம் வேண்டின் பின்னர் தெரிவிப்பேன்.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும் (நூன் மரபு -17)
மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
(நூன்மரபு-15)
எகர ஒகரத்தியற்கையும் அற்றே'' (நூன் - 16)
''ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்" (மொழி-6)
''வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்''
வேற்றுமையல் வழிப் புணர்மொழி நிலையும் (புண–10)
பெயருந்தொழிலிலும் பிரிந்தொருங்கு இசைப்ப...
... ...
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் (புண-30)
ஔ எனவருஉம் உயிரிறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளியிறுதியும் (தொகை -10)

வாழியவென்னும் சேயவென் கிளவி (உயிர்மெய்-9)

வகாரமிசையும் மகாரங் குறுகும் (புள்ளி -35)

மகன் வினை கிளப் பின் முதனிலையியற்றே (புள்ளி-64)

நூ றென் கிளவி ஒன்று முதலொன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே (கு. உ. புண-)

இனி இயலுக்கு ஒவ்வாத, அதிகராத்திற்கு ஒவ்வாத உரை விளக்கங்களும் உள.இவையாவும் தனித்தனித் தலைப்பிற் கூறவேண்டியவை ஈண்டு இடைப்பிற வரலாக யான் கூறியவற்றைப் பொறுத்தருள வேண்டிப் பொருளுரையை மேற்கொள்கின்றேன்

பொருளுரை

மொழி என்பது உயர்திணையாய மக்கள் தம் கருத்தை உணர்த்த ஒலிகளால் அமைத்துக் கொண்ட கருவியேயாம்,கருத்துக்கள் உருவம் அருவம் அருஉருவமாகிய பொருளை இடமாகக் கொண்டு வினை பயன் மெய் உரு முதலியவை பற்றி எழுபவை. அவற்றை ஒலிகளால் சுட்டி உணர்த்துங்கால் அவற்றின் ஒரு கூற்றினை வரைந்துணர்த்தும் ஒலி அல்லது ஒலிகளே சொல் எனப் படுகின்றது.எடுத்துக்காட்டாக ‘ஆ’ என்பது ஓரொலிச் சொல் ஆண், கா என்பவை ஈரொலி, ஆணி மூவொலி, காணி நான்கொலி, காணின் ஐந்தொலி, காணலை ஆறொலி, ஏனையவும் இவ்வாறே.

இவ்வாறு ஒரு சொல்லை வரையறுத்துணர்த்தும் ஒலிகள் ஒரே ஒலியின் இடைமாற்றங்களா? தனித்தனி ஒலிகளா ? இவற்றை நுணுகி ஆராய்ந்து கூறுவதே எழுத்தின் வரையறை இலக்கணம். இதனை வியக்கத்தக்க முறையில் கூறுகின்றது தொல்காப்பியம்.

கருத்துக்களைச் செவிப்புலனாக்கும் சொல் ஒவ்வொன்றும் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. ஆதலின் வளியொடு கூடி உள்ளிருந்து புறப்படும்நாதம் கண்டத்தினின்றும் வெளிப்படுத்தும் ஓசை ஒன்றேயாயினும் அதனை வெளிப்படுத்துங்கால் அதற்குக் கொடுக்கும் அடர்த்தியும் தளர்த்தியும் உயர்ச்சியும் தாழ்ச்சியும் கால அளவும் நாவும் வாயிதழ்களும் எய்தும் கோணமும் தொழிற்பாடும் வெவ்வேறு இசை ஒலிகளாகச் செவிப்புலனாகின்றன. இதனை,

“உந்திமுதலா முந்துவளி தோன்றி
... ...
உறுப்புற்றமைய ... ... சொல்லுங்காலை
வேறுவேறியல”

எனக் கூறுகிறது தொல்காப்பியம்.

உயிர்எழுத்து :-

இவ்வாறு வெளிப்படுங்கால் ஒருமுறை எழும் ஒரு முயற்சியில் ஓர் உருவமுள்ள ஓரோசையே பிறக்கும். வேறுபடுத்த வேண்டின் அம்முயற்சியை நிறுத்தி வாயுறுப்புகளின் நிலைகளை மாற்றி அடுத்த முயற்சி செய்தல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி எழும் முயற்சியானும் வாயுறுப்புக்களின் கோணங்களானும் உயிர்ப்பிசைகள் உயிர் எழுத்தாக அமைகின்றன என்பதைத் தொல்காப்பியம்.

> "பன்னீயிரும் தம்நிலை திரியா
> மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்"

எனவும்

> அவற்றுள் அ ஆ ஆயிரண்டங் காந்தியலும்

எனவும்

> "இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
> அப்பாலைந்தும் அவற்றோரன்ன
> அவைதாம்
> அண்பல் முதல் நா விளிம்புறலுடைய"

எனவும்

> "உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
> அப்பாலைந்தும் இதழ் குவிந்தியலும்"

எனவும்

> "தத்தம் திரிபே சிறிய என்ப"

எனவும் கூறுகின்றது.

இவற்றால் அ ஆ முதலியவை மாத்திரை யளவானன்றிப் பிறப்பிக்கும் முயற்சி வேறுபாட்டினாலும் வேறு வேறு எழுத்தாக ஆகின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது தொல்காப்பியம்.

பிறப்பு முயற்சியானன்றி மாத்திரையளவையான் மட்டும் எழுத்து வேறுபடுதலில்லை என்பதனை

> "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
> கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்"

என்பதனால் உய்த்துணரவைக்கின்றது.

இம்முயற்சி வகையினால் தமிழ்மொழிக்கண் பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் முயற்சி ஒன்றாகவும் கோணம் இரண்டாகவும் அமைந்தவை ஐ – ஔ என்னும் இரண்டுமே. அதனான் அவற்றிற்கு வேறு இரண்டு உயிர்ப்பிசைகள் போலியாக வருகின்றன என்பதை,

அகரஇகரம் ஐகாரமாகும் என்றும்

அகரஉகரம் ஔகாரமாகும் என்றும்

கூறுகின்றது. இவை (ஐ–ஔ) பிற ஒலிகளோடு இயையுங்கால் முற்கூறு அகரஓசையாகவும் பிற்கூறு முறையே இகரஉகர ஓசையாக வும் நிற்கும் என்பதை

"ஐ ஔ என்னும் ஆயிரெழுத்திற்கு
இகர உகரம் இசை நிறைவாகும்"

என்பதனானும் புணர்ச்சி விதிகள் கூறும் முறையானும் புலப்படுத்து கின்றது.

மற்றும் இகர உயிரும் யகரமெய்யும் ஒலி ஒற்றுமை உடைய வாகலின் சொல்லிறுதிக்கண் ஒன்றற்கொன்று மாற்றாக வரும், இதனை

இகரயகரம் இறுதி விரவும் எனக் கூறும், அதனான்
அகரத்திம்பர் யகரப்புள்ளியும்

ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும், என்றும் அவ்வழி அவை தமக்குரிய ஒன்றரை மாத்திரையிற் சுருங்கி ஒரு மாத்திரையளவாய் நிற்றலும் உண்டு என்றும் கூறுகிறது. இதனை "ஓரளபாகும் இடனுமாருண்டே

தேருங்காலை மொழிவயினான் என புலப்படுத்துகின்றது.

இவ் உயிர்ப்பிசைகள் நுரையீரலினின்றும் வெளிப்படும் மூச்சுக்காற்று,குரல்வளையில்உள்ள ஒலியூக்கிகளால் வெளிப்பட்டுச் செவிப்புலனாகின்றன என்பது மொழியியலார் கொள்கை. ஓசை என்பது ஆகாய பூதத்தின் தன் மாத்திரையாதலின் நாதம் உந்தி யில் தோன்றி மூச்சுக் காற்றொடு கலந்து வளியிசையாய் மாறித் தலையிலும் மிடற்றிலும் நெஞ்சிலும் நிலைபெற்று வெளிப்படும் என்கின்றது தொல்காப்பியம். இதனை

"உந்திமுதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ"
"எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரிவளியிசை"

என்பவற்றால் அறியலாம். (வளி – ஓசைக்காற்று)

உயிரைக் கருவிகளால் காண இயலாமை பற்றி அதன் உண்மையை மறுப்பதற்கில்லை — வளியிசை — உந்தி — தலை என்பவை பற்றி இன்றைய மொழியியலார்க்குக் கருத்து வேறுபாடுண்டு. காலம் தொல்காப்பிய மெய்ம்மையைப் புலப்படுத்தும் என்பது என் நம்புகை.

மெய்யெழுத்தும் — உயிர்மெய்யெழுத்தும் :

உயிர்ப்பிசைகள் ஒவ்வொன்றும் வாயுறுப்புக்களால் தடையின்றி வெளிவரின் அவை உயிர்எழுத்துக்களாதல் வெளிப்படை. அவை அவற்றால் தடையுறும்போது தடைப்பட்டு அத்தடை நீங்கியபின் தடைப்பட்ட இடத்தினின்று வெளிவரும் உயிர்ப்பிசைகள் தம் அளவில் திரியாமல் இசையில் திரிபுற்று ஒலிக்கும். அவ்வாறு தடைபடுத்தும் இடங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரொலியமைப்பினை உடையனவாக உள. தடைபடுத்தும் நாவும் இதழும் அண்ணத் தொடும் பல்லொடுங் கூடி **உருக்கொள்ளுகின்ற நிலையே மெய்யின் வடிவாகும்** என்கின்றது தொல்காப்பியம். இதனைப் "புள்ளியிலவா எல்லாமெய்யும்.

உருவுருவாகி" (அகரமொடு உயிர்த்தலும்)

என்பதனாற் புலப்படுத்துகிறது. இவ்வாறு மெய்வடிவு கொள்வதைப் பிறப்பியலில் பதினொரு சூத்திரங்களால் விளக்குகின்றது.

அவையாவன :-

"ககாரஙகாரம் முதல்நா அண்ணம்"

என்பது முதலாக "அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை

"கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும்"

என்பது வரை உள்ளனவாம். மகரக் குறுக்கத்தின் வடிவத்தை ஒலிப்பொடு கூட்டிக்கூறவேண்டிய நிலை ஏற்பட்டமையின் அதனை

"உட்பெறுபுள்ளி உருவாகும்மே"

என நூன்மரபின்கண் கூறியது.

இங்ஙனம் உருக்கொண்ட மெய், உயிர்ப்பிசையின் துணையாலன்றி வெளிப்படுதல் இயையாமையின் அகரம் முதலாய பன்னிரண்டு உயிர்ப்பிசைகளையும் துணைக்கொண்டு வெளிவரும் என்றும், அந்நிலையில் அவை உயிர்மெய் (உயிர்க்கும் மெய்) எனப் பெயர்பெறும் என்றும், துணையாக ஒன்றுபட்டிசைக்கும் உயிர்ப்பிசைகள் அவ்வம்மெய்களின் பிறப்பிடத்தையே தமக்கு இடமாகக் கொண்டு பிறக்கும் என்றும் தெளிவுபடுத்துகிறது. இவற்றை —

புள்ளியிலவா யெல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமொடு யிர்த்தலும்
ஏனை உயிரொடுருவுதிரிந்துயிர்த்தலும்
ஆயீரியல உயிர த்தலாறே என்பதனானும்
''மெய்யின்வழியது உயிர்த்தோன்றும் நிலையே''

என்பதனானும் புலப்படுத்துகின்றது.

இதனை ஒருவாற்றான் உணர்ந்த நச்சினார்க்கினியர் ''மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்ற மெய்களை இயக்குமேல் உயிர் எனவேறோர் எழுத்தின்றாம் பிறவெனின் மெய்யின் நிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க'' என நூன் மரபு எட்டாஞ் சூத்திர உரையில் கூறுவார் அவர் மதம் வேறாயினும் சில உண்மைகள் அவர்க்குப் புலப் பட்டுள்ளமை அவர் உரையுள் ஆங்காங்குக் காணக் கிடக்கின்றன. இனி இது நிற்க.

ஓர் உயிர்ப்பிசை தோன்றி முடிவுறாமல் இசைத்துக் கொண் டிருக்கும் நிலையில் மெய் உருக்கொள்ளுமாயின் அவ்உயிர்ப்பிசை யின் சார்பால் மெய்யொலி செவிப்புலனாகும். இங்ஙனம் ஒலிப் பொடு நிற்றல் மெய்யின் இலக்கணம் என்கின்றது தொல் காப்பியம்.

இதனை "மெய்யின் இயற்கை புள்ளியோடும் நிலையல்" என்று கூறுவதனால் அறியலாம். மெய்பதினெட்டனுள் கசடதபறங என்னும் ஏழுமெய்கள் நன்கு தடையுறுதலான் அவை இரண்டு உயிர்ப்பிசைகளுக்கு இடையே நின்றன்றிச் செவிப்புலனாகா. ஏனைய ஞணநமன யரலவழள என்னும் பதினொன்றும் ஒருயிர்ப் பிசையின் பின் இறுதியாக நின்று நன்கு செவிப்புலனாம். இந் நுண்மையைத் தொல்காப்பியம்

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்

என்பதனான் உய்த்துணர வைக்கிறது.

உயிர்ப்பிசையானது முன்னோ பின்னோ வந்தாலன்றி மெய் இயங்காது என்பதனை

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்று தெளிவு படுத்துகிறது. இவ் அகரம் சாரியை; உயிர் எழுத்தன்று.

சார்பெழுத்து :-

தடையற்ற உயிர்ப்பிசையாகாமல் மெய்யினைச் சார்ந்து பிறத்தலான் குற்றியலிகரமும் குற்றிலுகரமும்; உயிர்பிசையாகத் தோன்றி மெய்யின் கண் சென்று முடிதலான் ஆய்தமும். நேரே உயிருமாகாமல் மெய்யுமாகாமல் அவ்விரண்டனையும் சார்ந்து அரை மாத்திரையளவே ஒலிப்புப் பெறுதலின் சார்பெழுத்தா கின்றன என்பதைச்

சார்ந்து வரல் மரபின் மூன்று (நூன்-1)

எனவும்

சார்ந்து வரினல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப்படுத்த ஏனை மூன்றும் (பிறப்-19)

என்றும் கூறி, அவை சார்ந்து வருமாற்றைப் பின்வருமாறு கூறு கின்றது.

குற்றியலிகரம் :

யாவென்சினைமிசை மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டுமென்றும் யகரம் வருவழி இகரம் குறுகும் உகரக் கிளவிதுவரத் தோன்றாது என்றும்,

குற்றியலுகரம்:

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழீ ஈற்றும் வல்லாறூர்ந்து நிற்றல் வேண்டும் என்றும்

ஆய்தம் :

குறியதன் முன்னர் உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே என்றும் கூறித் தெளிவுபடுத்துகின்றது. (உயிரொடு புணர்ந்த என்றது உயிர்ப்பிசையொடு கூடி நின்ற என்றவாறு) இவை முழு மாத்திரை பெற்று இசைப்பின் உயிர் மெய்யும்-உயிருமாய் மாறிவிடும் என்பதையும் உய்த்துணர வைக்கின்றது. அதனான் மாத்திரையளவிற்கு

''மெய்யின் அளபே அரையெனமொழிப'' என்பதனோடு மாட்டெறிந்து ''அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே'' என்றும் புள்ளி பெறுதற்கு. ''மெய்யின் இயற்கை புள்ளியொடும் நில்லயல்'' என்பதனொடு மாட்டெறிந்து

''இகர உகரத்தியற்கையும் அற்றே'' என்றும் கூறுகின்றது (எகர ஒகரத் தியற்கையு மற்றே என்பது திரிந்து விட்ட பாடம்)

வரிவடிவம் :-

எழுத்துக்களின் ஒலிவடிவங்களுக்குக் கூறிய இலக்கண முறைமை வரிவடிவங்களுக்கும் பொருந்துமாறு நிற்கின்றமை தவிரத் தொல்காப்பியம் வரிவடிவிற்கென விதந்து எத்த ஒரு எழுத்திற்கும் இலக்கணம் கூறவில்லை என்பது என் கருத்து. வரிவடிவம் கூற முற்படின் அது கடைபோகாதது மட்டுமன்றிக் காலத்தால் நில்லாததுமாகிவிடும்.

தொல்காப்பியத்துள் வரிவடிவம் பற்றிய சூத்திரங்களாக, மரபாகக் கருதப்படுபவை வருமாறு

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
"எகர ஒகரத்தியற் கையுமற்றே"
"உட்பெறுபுள்ளி உருவாகும்மே"
"ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி"

என்பனவும்

"புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமொடுயிர்த்தலும்
எனை உயிரொடு உருவு திரிந்துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே" என்பதுமாகும்.

இலக்கணநூலின் நோக்கமும் பயனும் ஒருமொழி காலந்தொறும் வழங்குவோருடைய சோர்பு முதலியவற்றாலும் அயல்மொழிகளின் ஊடுருவல்களாலும் சிதைந்து விடாமல் காப்பதும் கடந்த காலச் சான்றோர்களின் கருத்துக்களைப் பிழையின்றி உணர்ந்து அம் மொழியை வளப்படுத்தத் துணைபுரிவதுமாகும்.

இறந்தகாலச் செய்திகளை உணரவும், நிகழ்காலச் செய்திகளை எதிர்காலத்திற்கு உணர்த்தவும் ஒலியுருவங்கள் பயன்படா. வரி வடிவங்களே பயன்படும் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அதனான் ஒலிவடிவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்னும் நிலை வந்த போது ஒவ்வொரு மொழியாளரும் தாம் வழங்கும் ஒலி உருவங்களுக்கு வரிவடிவம் அமைத்துக் கொள்வது இன்றியமை யாத இயல்பாகும்.

அவ்வரிவடிவங்கள் அவ்வக்காலங்களில் வாய்த்த கருவிகளுக் கேற்ப அமைந்து காலந்தோறும் மரபு திரியாமல் செம்மையொடு வளர்ந்து வருவது இயற்கை.

தொல்காப்பியர் பல நூல்களைப் பயின்றிருக்கின்றார். அவர் காலத்தில் ஒரு வடிவம் வழக்கில் இருந்திருக்கும் என்பது உறுதி.

அதுபற்றி இன்றைக்குத் தெரிந்து கொள்வதற்கு இயலவில்லை. சங்ககாலத்து வரிவடிவங்களும் கிட்டவில்லை

இன்றைக்குக் கிடைத்துள்ள கல்வெட்டு, செப்பேடுகளின் வரி வடிவங்களை நோக்கினால் அவை காலந்தொறும் வேறுபட்டு வளர்ந்துள்ளமை புலனாகும். பனை ஓலை வரிவடிவங்கள் பெரிதும் மாறுபடாமல் அழகு பெற்று வளர்ந்துள்ளமையும் அச்சுப்பொறி வந்த காலத்தில் ஓரளவு மாற்றத்தொடு இன்றைக்கும் வழங்கி வருதலையும் காணலாம்.

'ஆ' என ஓர் ஒலியை ஒலிக்கச் சொன்னால் மக்கள் அனைவரும் ஒரே இயலபாக ஒலிப்பார் - எழுதச் சொன்னால் மொழிதொறும் வேறுபடுதலேயன்றி ஒரே மொழிக்குள்ளும் வேறுபடும். அதனான் வரி வடிவு கூறுவதனாற் பயனின்மை அறியலாம்.

மற்று தொல்காப்பியம் முதநூலன்று. தொல்காப்பியர் எழுத்தைப் பற்றித் தொடங்கும் பொழுதே ''எழுத்தெனப்படுப அகரமுதல னகர இறுவாய் முப்பஃதென்ப'' என்றே தொடங்கு கின்றார். அதன்ன் எழுத்து நெடுங் கணக்கும் வரிவடிவும் செம்மை யாக வழக்கில் இருந்தமை தெரியலாம். இலக்கண நூலாசிரியர் பலர் செய்தவற்றை ஆராய்ந்து சுருக்கமாகத் தொகுத்து வரைந்ததே தொல்காப்பியர் செய்ததெனப் பாயிரங்கூறுகின்றது.

இந்நிலையில் அப்பேரறிஞர்களும் பயிலும் மாணவர்களும் உயிர்மெய்க்கும் — தனிமெய்க்கும் வேறுபாடறியாமலும் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்கட்கும் வேறுபாடறியாமலும் எழுதி வந்தனர் என்பது பொருந்துமாறில்லை. அங்ஙனம் எழுதிவந்த காலத்து வேறுபாட்டினை எப்படி உணர்ந்தனர் உணர்த்தினர்? இதற்கு இப்படி ஒரு விளக்கம் உண்டு. அஃதாவது

வடமொழியில் எகர ஒகரக்குற்றெழுத்துக்கள் இல்லை. தமிழ் மொழியில் உண்மையினால் அவற்றின் வேறுபாட்டினைச் சுட்ட வேண்டிற்று என்பது. அவ்வாறானால் ஏனையவற்றிற்கு வட மொழியில் உள்ள வரிவடிவமே தமிழிலும் மேற்கொள்ளப் பட்டதென்று ஆகுமன்றோ? அது நிற்க. 'ழறன' என்னும் மெய்யெழுத்துக்களும் வடமொழியில் இல்லை. அவற்றிற்கு வரி வடிவம் கூறவேண்டாமா? எனவே இவ்விளக்கம் பொருந்து மாறில்லை.

மற்று வரிவடிவே கூற முற்பட்டிருப்பின் மெய்யின் வடிவம் புள்ளியிட்டமைத்தல் என்றோ புள்ளியொடமைதல் மெய்யின்

வடிவே என்றோ வடிவத்தைச் சுட்டிச் சூத்திரம் செய்திருப்பார் ஆசிரியர். அவ்வாறின்றி மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் என்று கூறுகின்றார். இயற்கை என்பதற்கு வடிவு என்றும் பொருள் உண்டா என்பதும் காணல் வேண்டும்.

உயிர் எழுத்துக்கட்கு மாத்திரையும் ஓசையியல்பும் ஒருங்கு கூறிய ஆசிரியர் மெய்யெழுத்திற்கு மாத்திரை மட்டும் கூறுவது நிறைவுடையதாகுமா? உயிரெழுத்தின் ஓசையை இசை என்று குறிப்பிட்டமைபோல மெய்யெழுத்தின் ஓசையைப் புள்ளி என்று கூறுவதாகக் கொள்ளலே ஏற்புடைத்தாகின்றது. ஒலிப்பினைப் புள்ளி என்று குறியீடு செய்தமைக்குக் காரணம் வரிவடிவிற்கும் அது பொருந்தி வரல் வேண்டுமென்பதற்காக எனக் கொள்ளல் வேண்டும்.

ஒலி எழுத்து ஒவ்வொன்றிற்கும் வரிவடிவம் உண்டு. 'எழுத்து' என்னும் குறியீடே அவ்விருதன்மையும் அமைந்துள்ளமை காட்டும் வரிவடிவுள் சிறு சிறு வேறுபாடும் ஒலி வேறுபாட்டினைக் காட்டும் ஆதலின் ஒலிப்பினைச் சுட்டாத வரிவடிவம் என்பதொன்றில்லை.

"நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉக"

என்னும்போது ஓசையைக் கூட்டி எழுப்புக என்பதோடு வரிவடிவில் அதற்குரிய அடையாளமும் செய்து கொள்க என்பது பெறப்பட்ட தன்றோ? இன்றேல் "குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும் நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே" என்னும் சூத்திரம் நெட்டெழுத்திற்கும் நெட்டெழுத்தளபெடைக்கும வரி வடிவ வேற்றுமை கூறுகின்றது என்று கூறவேண்டி வரும்.

வாயுறுப்புக்களால் வடிவமைந்த மெய்யெழுத்துக்கள் உயிர் ஓசையின்றி இயங்காமையின் மெய்யின் இயக்கம் அகரமொடு சிவனும் என்றார். ஆண்டு அகரம் ஒரு மாத்திரையளவினதாகலின் மெய்யின் அளபே அரை என்பதனை எண்ணி ஐயுறாமலும் ஒலிப்பில்லாதவை எங்ஙனம் எழுத்தாகும் என்னும் ஐயந்தோன்றாமலும் மெய்யினது தன்மை ஒலிப்பொடு நிற்றலாம் என்பதை விளக்க மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல் எனப்பட்டது. ஒரு மாத்திரையளவினதாகிய சாரியை அகரம் இன்றி அரை மாத்திரை பெறுதலைச் சுட்டுவதே 'புள்ளி' என்னும் குறியீடு என்பது இதனாற் புலப்படும்.

சார்பெழுத்துக்களும் இவ்வாறே அரைமாத்திரை ஒலிப்புப் பெறுதலின் மெய்யெழுத்திலக்கணத்தோடு மாட்டெறிந்து கூறப்

பட்டது.சார்பெழுத்துக்களை அறிமுகப்படுத்தும்போதே ஆய்தத்தை முப்பாற் புள்ளி என விளக்கியமையின் அதனை நீக்கி ஏனைய குற்றியலிகரத்தையும் குற்றியலுகரத்தையும் விதந்து

"இகர உகரத்தியற்கையுமற்றே" எனக் கூறினார் ஆசிரியர்.

இச்சூத்திரத்தில் கூறிய இகர உகரங்கள் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் எனக் கருதாமல் உயிர் வரிசையில் உள்ள இகர உகரமாக எண்ணி அவை புள்ளி பெறுதற்கு வாய்ப்பில்லையே என மயங்கி எகர ஒகரத்தியற்கையுமற்றே என இருக்கலாம் எனத் திருத்திக்கொண்டனர் போலும். இத்திருத்தம் உரையாசிரியர் காலத்திற்கும் முன்பே நிகழ்ந்திருக்கலாம்.

மற்று ஆய்தத்தைப் பிரித்து ஓதியதற்குக் காரணம் ஏனைய வற்றைப் போல மெய்யினை உணர்ந்தோ உயிரேற இடந்தந்தோ நில்லாமல் தனித்தன்மையுடையதாக இருப்பது மட்டுமின்றித் தன் னளவிற் சுருங்குதலோ குற்றியலுகரம் போல ஒரேவழி மாத்திரை இழத்தலோ இல்லை. மேலும் அவை ஒலி வேறுபடுவதில்லை.ஆய்த ஒலி தனக்கு மேல் நின்ற உயிர்களுக்கு ஏற்ப மூலவகையான ஒலியைப் பெறுகின்றது. அஃதாவது அகர இகர உகரங்களைச் சார்ந்து வருங்கால் அவ்வவ் ஒலிகளைப் பெறும். இதனை அஃஇஃ உஃ என ஒலித்துக் காணலாம். அதனான் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி என ஆசிரியர் விளக்கினார்.

இதனான் மெய்யெழுத்துக்கள் தம் முன்னின்ற மெய்களை நோக்கி ஒலிமயங்குமாறு போல இதுவும் மயங்கும் எனஉய்த்துணர வைத்தார். இவ்ஒலிவடிவ இலக்கணத்தானே வரிவடிவஅமைதியை யும் தன் சதுரப்பாட்டினால் தோன்ற வைத்தார்.

இவ்வாறே அரைமாத்திரை ஒலிப்புடைய மகரத்திற் கும் கால் மாத்திரை ஒலிப்புடைய மகரக் குறுக்கத்திற்கும் ஒலிப்பு முறையில் உள்ள வேறுபாட்டைச் சுட்டுவதே "உட்பெறுபுள்ளி உரு வாகும்மே' என்னும் சூத்திரம். அதனை வரிவடிவிற்கும் ஒக்கு மாறு கூறியுள்ளமை ஆசிரியரின் பெருந்திறலைக் காட்டும்.

இனித் தமிழ்மொழியைத் தவிர ஏனைய மேலை ஆரிய மொழி களிலும் சமஸ்கிருதத்திலும் மெய்யெழுத்துக்கள்மொழி முதற்கண் வரும். இரண்டு-மூன்று மெய்கள் இணைந்தும் வரும். காரணம், அம்மொழிகள் மெய்யினை ஒலிப்புடையதாக அமைத்துக் கொண் டுள்ளன. அஃதாவது உயிர்பிசையை மெய்யின் முன்னோபின்னோ தந்து ஒலித்து அவ் இசையை அதற்கு உரியதாக்கிக்கொண்

சிவபுராண யாப்பு

திரு. அடிகளாசிரியர்,

தோற்றுவாய்

திருவாசகத்தில் சிவபுராணப் பாட்டு, தொல்காப்பியர் கூறியுள்ள எழுநிலத்தெழுந்த செய்யுள்களில் பாட்டு என்னும் செய்யுள் வகையைச் சார்ந்தது. இது தொண்ணூற்றைந்து அடிகளை உடையது. இப்பாட்டில் ஈற்றடிமட்டும் முச்சீர்பெற்ற சிந்தடியாகும். ஏனைய அடிகளெல்லாம் நாற்சீர் பெற்ற அளவடிகளே.

சிவபுராண யாப்பினைப் பற்றிய பலர் கருத்து

இச்சிவபுராணப் பாட்டினைப் பல திருவாசகப் பிரதிகள் **'சிவபுராணத்தகவல்'** என்றே குறிப்பிடுகின்றன. அன்றித் திருவாதவூரர் புராணமும் 'அகவல்' என்றே குறிப்பிடுகின்றது. திருவாசகப் பதிக வரிசை கூறும் வெண்பா அந்தாதியும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன. அதனான் சமஸ்கிருதத்தில் மெய்யெழுத்திற்கு மாத்திரை ஒன்றரையாக உள்ளது.

தமிழ்நூலார் உயிரினது சார்பின்றி வேறெவ்வாற்றானும் மெய் ஒலிக்காதென்னும் மெய்ம்மையை ஓர்ந்து

"உயிர்மெய்யல்லன மொழி முதலாகா" என விதித்த அறிவியல் நோக்கு வியக்கத்தக்கது.

ஒலிப்பின்றி உருக்கொண்டு நிற்கும் மெய்யின் கண் உயிர்ப் பிசை கூடி உயிர்மெய்யாய் வெளிப்படுதலின் உயிர்மெய் ஏன் ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் ஆகவில்லை என்னும் வினாவிற்கு இடமே இல்லை. உயிர் மெய்யைச் செவிப் புலனாக ஒலித்து இவ்வுண்மையைக் காணலாம்.

எனவே தொல்காப்பியம் கூறும் இலக்கணம் யாவும் ஒலிவடிவிற்கே என்பதும் ஒப்பக்கூறல் என்னும் உத்தி வகையான் அவ் இலக்கணமே வரிவடிவைச் செய்து கொள்ள ஏற்புடையதாக உள்ளதென்பதும் புலனாம். அறிஞர் உலகம் ஆய்ந்து ஆவன புரிய வேண்டி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

இக்கட்டுரை 27-12-1982 ஆம் நாள் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த தொல்காப்பியக் கருத்தரங்கிற் படிக்கப் பெற்றது.

''திருவகவல் நான்கின் திறங்கேளாய் நெஞ்சே''

என்று சிவபுராணம் முதலிய நான்கிணையும் 'திரு அகவல்' என்றே கூறுகின்றது.

ஆனால், வேறு சில அறிஞர் இப்பாட்டு அகவல் அன்று; கலிவெண்பாவே ஆகும் என்று கூறுகின்றனர்.

சிவபுராணம் அகவலும் அன்று; கலிவெண்பாவும் அன்று;

இச்சிவபுராணம் முற்றிலும் இயற்சீர் விகற்பத்தால் வந்த வெண்டளைகளையும், வெண்சீர் ஒன்றிவந்த வெண்டளைகளையும் பெற்று ஈற்றடி பிறப்பு என்னும் அசைச்சீரால் முடிதலின் இது அகவலன்று என்பது தோற்றமாகும்.

ஆனால், இச்சிவபுராணப் பாட்டில் அடிகளார் இறைவனை உளங்கனிய அழைத்துப் (அகவிப்) புகழ்கின்றார். இவ்வாறு அழைத்துப் பேசுகின்றமையின் முன்னோர் திருவாசகத்துள் இப் பகுதியை அகவல் என்று கொண்டனரோ என்பதும் கருத வேண்டியுள்ளது என்பர். தஞ்சாவூர் பள்ளி அகரப் **பேரறிஞர் நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்** (அவர்கள் திருவாசகப்பதிப்பு)

இவர்கள் கூறுவது கருதத்தக்கதொன்றாகும். ''அகவல் என்பது அழைத்தலு மாகும்" என்று பிங்கல நிகண்டு கூறுவதாலும், சங்க இலக்கியங்களில் அகவல் என்பது அழைத்தற் பொருளில் வருதலானும், தொல்காப்பியர் ''ஏனையொன்றே, தேவர்ப் பராஅம் முன்னிலைக் கண்ணே'' (தொல். செய். 133) என்னும் நூற்பாவால் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பரவும் வழக்கத்தைக் குறிப்பிடுதலானும், தெய்வத் திருநூலாகிய திருமுருகாற்றுப்படை,

''... ... ... சாண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
... ...
அறுவர் பயந்த ஆறமர் செலவ!
ஆலகெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
... ...
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி" (250—276)

என்று கூறும் பகுதியால் அவ்வழக்கத்தைத் தெளிவாகப் புலப் படுத்துதலானும். இச்சிவ புராணம் இறைவனை முன்னிலைப் படுத்தி அழைத்துப் பரவும் பொருளால் அகவலாகும்; யாப்பால் அகவலன்று.

கட்டுவிச்சி தெய்வத்தை அழைத்துப் பரவும் பாட்டிற்கு அகவல் என்றே பெயரிருத்தலை,

"அகவன் மகளே பாடுக பாட்டே" (குந்று. 23)

என்பதால் அறிந்து கொள்ளலாம்.

இச் சிவபுராணம் அகவல் போல் அடிநிமிர்ந்து வருதலால், சிலர் அகவலென்றே மயங்கக் கருதினர் போலும். அடுத்துச் சிவபுராணப் பாட்டு கலிவெண்பாவா ? என்பதையும் பார்ப்போம்.

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல். செய்.102)

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே"
(தொல். செய். 105)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொதுவிதிப்படி ஆசிரியம் வஞ்சி வெண்பா கலிப்பா என்னும் நான்கு பாக்களும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற்பொருளிலும், வாழ்த்தியற் பொருளிலும் வரும்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்" (56)

என்று கூறியுள்ள சிறப்புவிதியின்படி, அகத்திணை பற்றிய புலனெறி வழக்கிற்குக் கலிப்பாவும் பரிபாடலும் சிறந்தனவாம்.

இளம்பூரணர் செய்யுளியல் 126 ஆம் நூற்பாவுரையில்.

"இருவயி னொத்தும் ஒவ்வா இயலினும்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வருஉம்
கலப்பே யாயினும் புலப்பே யாயினும்
ஐந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படுஉங் காட்சித் தாகும்"

குறிப்பு :- வச்சணந்திமாலையும் "தூய, அகப்பொருண்மேலன்றி அருங்கலிகள் வாரா" என்று (44) கூறும்.

என்று **அகத்தியனார்** ஓதுதலின், கலிப்பா அகப்பொருளென வழங்கும்'' என உரைத்தலால், கலிப்பா அகப்பொருட்கே சிறந்த தென்று தெரிகின்றது.

மேலும், தொல்காப்பியர் செய்யுளியலில் கலிப்பாவிற்கு இலக் கணம் கூறும் பொழுது கலிப்பா அகப்பொருள் பற்றி வரும் என்ற அதிகாரம் எல்லாக் கலிப்பாவிற்கும் வருதலால், அவ்வதிகாரத்தை வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் அதன் இழிபாகிய கொச்சக ஒரு போகிற்கும் அம்போதரங்கத்திற்கும் மாற்ற வேண்டி, அம்மூன்றும் தேவர்ப்பராவும் பொருளில் வரும் (செய். 133) என்று கூறியுள்ளார்.

அவ்வாறு கூறவே, ஏனைய கலிப்பாக்களெல்லாம் முன்னைய விதிப்படி அகப்பொருளே பற்றி வரும் என்பதாயிற்று. எனவே, அவற்றுள் ஒன்றாகிய கலிவெண்பாவும் அகப்பொருள் பற்றி வருவதாயிற்று.

மேற்கூறியவாறு அகப்பொருள் பற்றி வரும் கலிப்பாக்களுள் கலிவெண்பாவிற்குத் **தொல்காப்பியர்,**

"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி யியலால்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே" (செய். 147)

என்னும் நூற்பாவால் இலக்கணம் கூறியுள்ளார்.

இந்நூற்பாவிற்கு **இளம்பூரணர்** "ஈற்றடி யளவும் ஒரு பொருளைக் குறித்து, வெள்ளடி யியலால் திரிபின்றி முடிவது கலி வெண்பாட்டாம்'' என்று உரை எழுதி "மரையா மரல்கவர" (6) என்ற கலித்தொகைப் பாட்டினை எடுத்துக் காட்டி, இது வெண் டளையான் வந்த வெண்கலிப்பா என்றனர்.

அவர் மேலும் "அஃதேல், இது நெடுவெண்பாட்டிற்கு ஓதிய இலக்கணத்தால் வருதலில் பஃறொடை வெண்பாவாம்; இதனை வெண்கலிப்பா என்றதென்ன எனின், என்று வினாவிக்கொண்டு, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் சொல்லப்பட்ட காமப்பொருள் ஏழனுள்ளும் யாதானுமொரு பொருளைக் குறித்து ஏனைக் கலிப்பாக்கள் போலத் தரவும் தாழிசையும் தனித்தனி பொருளாக்கிச் சுரிதகத்தால் தொகுத்து வரு நிலைமைத்தன்றித் திரிபின்றி முடிவதனைக் கலி வெண்பா எனவும், புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் பஃறொடை வெண்பா எனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத் தென்க'' என்று கூறியுள்ளார்.

இவர் இவ்வாறு கூறுவதைக் கருதினால், கலிவெண்பா ஒரு பொருள் நுதலிய அகப்பொருள் மேல்தான் வரும் என்பது புலனாகின்றது. கலித்தொகையில் வந்துள்ள கலிவெண்பா எல்லாம் அகப்பொருட் பாட்டாகவே உள்ளன

இச்சிவபுராணம் முற்றிலும் வெண்பா யாப்பாகவே வந்து இறுதி வெண்பா இயலால் முடிந்தாலும், அகப்பொருள் மேலதாய் வாராமல், புறப்பொருட்கண் தெய்வத்தை முன்னிலைக்கண் வைத்துப் பரவும் துறையில் வந்துள்ளதால் கலிவெண்பா அன்று; இஃது ஒருவகை வெண்பா யாப்பினை உடைய பாட்டாகும் என்றே கருத வேண்டியுள்ளது.

இச்சிவபுராணம் கலிவெண்பா அன்றாயின், ஓர்வகை வெண்பாவே ஆயின், இஃது எந்தவகையான வெண்பாவின்பாற்படும் என்று வினா எழுகின்றது. அவ்வினாவிற்கு விடையைக் கீழே தருகின்றேன்.

சிவபுராணம் அறுவகை வெண்பாவுள் செய்யுள் வெண்பா என்பது :

தொல்காப்பியர் செய்யுலியலில் வெண்பாவகைகளை

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுளோடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின" (114)

என்ற நூற்பாவினால் கூறியுள்ளார். "நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் கைக்கிளையும் பரிபாடலும் அங்கதமும் செய்யுளும் ஆகிய ஆறும் தம்மின் ஒத்து வெண்பா யாப்பினவாய் வரும் என்பது மேல் நூற்பாவின் பொருளாகும்.

இவ்வாறு மேற்கூறப்பட்டுள்ள அறுவகை வெண்பாக்களில் செய்யுள் வெண்பாவை அங்கதத்தின் பின் வைத்து ஆசிரியர் ஓதியுள்ள முறையை அறிஞர் கருதி உணர்க.

இந்நூற்பாவில் நிறுத்த முறையானே அங்கதவெண்பாவை உணர்த்திய பின்னர், செய்யுள் வெண்பாவின் சிறப்பிலக்கணத்தை ஆசிரியர் கீழ்வருமாறு ஓதுகின்றார்.

"செய்யுள் தாமே யிரண்டென மொழிப"
"புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்"
"வசையொடும் நசையொடும் புணர்ந்தன றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" (செய், 123,

124, 125) என்பவை அந்நூற்பாக்களாகும்.

"அறுவகை வெண்பாக்களுள் ஈற்றிற் கூறிய செய்யுள் வெண் பாத்தாமே இரண்டு வகை எனக் கூறுவர் புலவர்" (123)

"ஒரு தலைவனைப் புகழ்ந்து கூறும் புகழுரையொடும் அவனுக்கு அறிவுறுத்தும் உண்மைப் பொருளொடும் கூடியதாக வரின், அது அத்தலைவனுடைய செவியில் அறிவுறுத்தும் செவி யுறைச் செய்யுள் வெண்பாவாகும். (124)

குறிப்பு : இது "பொங்குதலின்றி" (செய். 110) என்ற அடி களால் கூறப்பட்ட செவியறிவுறூஉவில் வேறுபட்டதென்க.

"நண்பாயிருப்பார் தீநெறி ஒழுகின் அவரைத் திருத்துதற் காக இடித்துரை கூறும் வசையொடும் அவர் மேல் தமக்குள்ள பற்றினைப் புலப்படுத்தும் நசைமொழியொடும் கூடிவரின் அங்கதச் செய்யுள் வெண்பா என்பர் புலவர் (125)

குறிப்பு : இது, மேற்கூறிய செம்பொருள்' கரந்தது என்ற இரு வகை அங்கதங்களிலும் வேறுபட்டதென்க. அவை நசையின்றிக் கூறப்படுவன. இது நசையுடன் கூறப்படுவதென்று வேறுபாடறிக.

தொல்காப்பியர் "செய்யுள் தாமே இரண்டென மொழிப" (123) எனக் கூறியதன்றி, அவ்விரண்டிற்கும் செய்யுள் என்னும் சொல்லைப் பெய்து, செவியுறைச் செய்யுள் அங்தகச் செய்யுள் என ஓதியுள்ள கருத்தினை ஓர்ந்துணர்க.

தொல்காப்பியர் அளவியல் என்னும் உறுப்பில் மேலே கூறி யுள்ள பாக்களுக்கு அளவு கூறுமிடத்தே நெடுவெண்பாட்டுப் பன்னி ரண்டடி காறும் வரும் என்றும், குறுவெண்பாட்டு இரண்டடியாயும் வரும் என்றும், அங்கதவெண்பாவிற்குச் சிறுமை இரண்டடியாயும் வரும் என்றும், அங்கதவெண்பாவிற்குச்சிறுமை இரண்டடியாயும் பெருமை பன்னிரண்டடியாயும் வரும் என்றும், ஆனால் கலி வெண்பா, கைக்கிளை வெண்பா, செய்யுள்வெண்பா, செவியறிவுறு2 வாயுறை வாழ்த்து, புறநிலை வரழ்த்து என்னும் இவற்றிற்கு அடி வரையறை கூறப்படா; பொருள் முடியுங்காறும் வேண்டிய அடி களைப்பெற்று வருமென்றும் கூறுகின்றார். இங்கே செய்யுள் வெண் பாவிற்கு அடிவரையறை இல்லை என்று கூறப்படுவதால், நெடு வெண்பாவிற்கோதிய பன்னிரண்டடிக்குமேல் பொருண்முடியுங் காறும் வேண்டிய அடியால் அது வரப்பெறும் என்பதாயிற்று.

செய்யுள் வெண்பா உரையாசிரியர்களால் மறைக்கப் பட்டதாயிற்று:

தொல்காப்பியர் செய்யுளியல் 114,123,124, 125, 153 என்னும் ஐந்து நூற்பாக்களால் எடுத்தோதிய செய்யுள் வெண்பாவின் இலக்கணத்தை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மேற்கண்ட நூற்பாக்களுக்கு **வேறு உரை கூறி மறைத்தே விட்டனர்.**

பேராசிரியர் அம்மறைப்பைத் தம் மறுப்பினால் புலப் படுத்தினர் :

ஆனால், பேராசிரியர் இளம்பூரணரைப் போலவே மேற்கண்ட நூற்பாக்களுக்கு வேறு உரை கூறினாலும்,தம் மறுப்புரை ஒன்றால் செய்யுள் வெண்பா என ஒன்றிருந்தது என்பதைப் புலப்படுத்தி விட்டார். **அரிய செய்தி ஒன்றினைத் தம் மறுப்புரையால் வெளிப் படுத்திவிட்ட அவர்க்கு நாம் நன்றி செலுத்தக்கடமைப்பட் டுள்ளோம்.**

அவர் மறுப்புரை வருமாறு :

''அங்கதச்செய்யுள், என்பது பண்புத்தொகை. **உம்மைத் தொகை என்பார் செய்யுள் என்பதும் வேறு என்ப.** அதற்கு விடை முன்னர்ச் சொல்லுதும்" என்று 'நெடுவெண் பாட்டே' (பேரா. செய் 118) என்னும் நூற்பாவுரையில் கூறி, ''செய்யுள் தாமே யிரண் டென மொழிப''(பேரா. செய். 127) என்னும் நூற்பாவுரையில்,

இனி ஒருவன் உரை : "இவற்றுள் தொகைச் சூத்திரத்துள் கைக்கிளை பரிபாட்டங்கதஞ் செய்யுள்'' எனப்பாடம் ஓதி அங்கதமும் செய்யுளுமென இரண்டாக நிறுத்தான்; நிறுத்த முறையானே அங்கதம் உணர்த்திச் செய்யுள் உணர்த்திய செய்யுள் தாமே இரண்டென மொழிப என விதந்தான் என்பது; என்று அவ்வுரையைக் கூறிக் கொண்டு, மறுப்புரை கூறுகின்றார்.

மறுப்புரை

அற்றன்று ; எல்லாப்பாட்டும் செய்யுள் எனப்படுதலின் அவற்றுள் ஒன்றனையே செய்யுள் எனல் ஆகாது;

அல்லதூஉம் '' அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்' (தொல் செய். பேரா. 129) என இனி வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலான் இவையும் (இவ்விரண்டும்) அங்கதச்செய்யுளே, மேலைச்சூத்திரத் துள்ளும் (செய். பேரா. 118) அங்கதச் செய்யுள் என்பதே பாடம்

என்பது, அதனாற் (அங்கதச்செய்யுள் என்மனார் 'புலவர் என்று கூறியதனால்) பெறுதும்என்பது' என்று மறுப்புரைவழங்கியுள்ளார்

பேராசிரியர் இவ்வாறு கூறிமறுத்தாலும், 'செய்யுள்' என்று தொல்காப்பியர் கூறும் வெண்பாபண்டு இருந்திருக்கிறது என்பதை

'ஏழடி இறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே
'மிக்கடி வருவது செய்யுட் குரித்தே'
''சங்க யாப்பு''
ஆறடி முக்காற் பாட்டெனப் படுமே
ஏரிய அடியும் செய்யுளுள் வரையார்
"நூற்பெயர் தெரியாதது"

(யா.வி கழ.பக். 132,133,251)

என வரும் யாப்பருங்கல விருத்தி மேற்கோள் நூற்பாக்களால் அறியப்படுகின்றது.

மேற்காட்டிய நூற்பாக்கள் வெண்பாவின் அடிச்சிறுமை பெருமைகளை உணர்த்த, விருத்தி ஆசிரியரால் மேற்கோளாக எடுத்து காட்டப்படுகின்றன.

''இரண்டடி முதலாக ஏழடி இறுதி வெண்பாவிற்குரிய அடிகளாகும். ஏழடியில் மிக்க அடிவருவது செய்யுள் என்னும் வெண்பாவிற் குறித்து''

"ஆறடி முக்கால் (ஏழடி) வெண்பாட்டிற்குரிய அடியாகும் ஏழடிக்குமேல் ஏறிய அடியும் செய்யுள் வெண்பாவில் நீக்கார்" என்பன மேற்காட்டிய நூற்பாக்களுக்குரிய பொருளாகும்.

மேற்குறிப்பிட்ட நூற்பாக்களால், செய்யுள் என்னும் பெயருடைய வெண்பாவகை பண்டு இருந்ததென்னுஞ் செய்தி புலனாவதால் பேராசிரியரின் முதல் மறுப்பு ஏற்றதாகத்தெரியவில்லை.

'அல்லதூஉம்,' அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்' என வருகின்ற சூத்திரத்து ஓதுமாகலின் (செய். பேரா. 129) இவையும் அங்கதச்செய்யுளே என்று, மற்றொரு மறுப்பையும் பேராசிரியர் கூறுகின்றார்.

அவர் இவையும் என்று குறித்தது, 'செய்யுள் தாமே இரண்டென மொழிப' என்ற நூற்பாவினால் கூறப்பட்டுள்ள இரண்டினையாகும். அவர் கூறுகிறபடி,இரண்டும் அங்கதமாயின்,ஒன்றைச்செவி

யுறைச் செய்யுள் என்றும், மற்றொன்றை அங்கதச்செய்யுள் என்றும், கூறுவது பொருந்தாதென்க. மேலும் அவர் மேலைச்சூத்திரத்துள்ளும் (செய். பேரா. 118) (அங்கதஞ் செய்யுள் என்பது பாடமாகாமல்) அங்கதச் செய்யுள் என்பதே பாடமென்பதூஉம் அதனால் பெறுது மென்பது என்று கூறுகிறார். அவர் அவ்வாறு கூறுவதின் கருத் தென்னை எனின்? செய்யுள் வகை இரண்டில் ஒன்றை அங்கதச் செய்யுள் என ஓதியதால் முன்னே உள்ள தொகைச் சூத்திரத்தில் (செய். பேரா. 118) அங்கதஞ் செய்யுள் என உம்மைத்தொகையாக பாடங்கொள்ளாமல் அதனையும் அங்கதச் செய்யுள் எனப் பண்புத் தொகையாகவே பாடங்கொள்ள வேண்டும் என்பதாம். இதுவும் பொருந்துமாறில்லை. என்னை எனில்? இங்கே செவியுறைச் செய்யுள் அங்கதச்செய்யுள் என்பன பண்புத்தொகை நடையில் உள்ளன. தொகைச்சூத்திரம் (118) நெடுவெண்பாட்டும் குறுவெண் பாட்டும் கைக்கிளையும் பரிபாட்டும் என்னும் இவை உம்மைத் தொகை நடையாக இருத்தலின், இவற்றை அடுத்த அங்கதமும் செய்யுளும் 'அங்கதஞ் செய்யுள்' என உம்மைத் தொகையாகவே அமையும் என்க.

இதனைப்போலவே, அளவியலில் வரும் கலிவெண்பாட்டே' (153) என்னும் நூற்பாவுள் ''கலிவெண்பாட்டும் கைக்கிளையும் செய்யுளும் செவியறிவும் வாயுறையும் புறநலையும் என்னும் இவை என்ற பகுதி, எண்ணுநிலைகளினாலேயே தொடர்ந்ததென்க.

நமக்குத் தெளிவாகத் தெரிவது :

எனவே 'செய்யுள்' என்று பெயருடைய ஓர்வகை வெண்பாப் பாட்டு பண்டு இருந்ததென்பது, தொல்காப்பியர் கூற்றாலும், அதற்கு உரைசெய்த ஓராசிரியர் கூற்றாலும், சங்கயாப்புடையார் முதலிய யாப்பிலக்கண ஆசிரியர் கூறும் நூற்பாக்களாலும், நமக்குத் தெளிவாகத்தெரிகின்றது.

மாணிக்கவாசகர் பாடிய சிவபுராணப்பாட்டு தொல்காப்பியர் கூறிய செய்யுள் வெண்பாவே ஆகும். யாப்பருங்கல விருத்தியா சிரியர் இன்னும்பல அடியால்வந்த பஃறொடை வெண்பா இராமா யணமும் புராண சாகரமும் முதலாகவுடைய செய்யுள்களிற் கண்டு கொள்க'' என்று எழுதுவதை நோக்கினால், இச்செய்யுள் வெண்பா புறப்பொருள் பற்றிப்பழைய நிகழ்ச்சிகளின் மேலதாய் வரும் என்று தெரிகின்றது.

சிவபுராணம் என்பதற்கு 'முன்மை அறிய முடியாத பழமை' என்று விளக்கம் கூறப்படுவதால், இது

“இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்”
(தொல். செய். ?30)

என்னும் நூற்பா விதியால் அமைந்த ‘தோல்’ என்னும் தனிச் செய்யுள் வனப்புடைய தென்க.

சிவபுராணம் செவியறிவுறூஉப் பொருள் உடையது :

செவியறிவுறூஉவின் பொதுப்பொருளாவது ஒருவரை முன்னிலை படுத்தி விளித்து அவர் தம் செவியின்கண் அறிவுறுத்திக் கூறுதலாகும். சிறப்புப்பொருள் வெவ்வேறுபட்டுவரும்.

தொல்காப்பியர் புரையோர் நாப்பண் பொங்குதலின்றி அவிதல் கடன் எனவும் (தொல். செய். 110) ஒருவனுடைய புகழொடும் பொருளொடும் புணர்ந்து வருமெனவும் (செய் 124) சிறப்புப் பொருளை வேறுபடுத்திக் கூறுகின்றார். புறப்பொருள் வெண்பா மாலை அரசனுக்குச் சூழ்ச்சியைச் செவிக்கண் அறிவுறுத்துதலே செவியறிவுறுஉவாம் என்று கூறுகின்றது.

இவற்றிலிருந்து செவியறிவுறூஉவிற் கூறப்படும் பொருள் இடத்திற்கு தக்கவாறு மாறுபட்டு வரும் என்பது புலனாகும்.

அடிகளார் இறைவனைப் பலபடித்தாக முன்னிலைபடுத்தி விளித்துப் புகழ்ந்து, ஈற்றில் “அல்லற் பிறவி அறுப்பானே ஓ” என்று கூறுவதால் தன் பிறவி அறுதல் வேண்டும் என்பதைக் குறிப்பெச்சத்தால் குறித்துச் செவியறிவுறுத்தாராயிற்று. அதனால் இச்சிவபுராணம் செவியறிவுறூஉ என்னும் பொருளில் வந்த (செய். 124) செய்யுள் வெண்பாவாகும்.

கலிவெண்பாவின் பிற்கால நிலை :

கலிவெண்பா அகப்பொருள் பலவற்றுள் ஏதாவது ஒருபொருள் நுதலித்தான் வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ள செய்தியும், கலித்தொகையில் வந்துள்ள கலிவெண்பாவெல்லாம் அவர் கூறிய வாறே வந்துள்ள செய்தியும் முன்னே கூறப்பட்டன.

பிற்காலத் தெழுந்த யாப்பருங்கலம் முதலான யாப்பிலக்கண நூல்களெல்லாம் தொல்காப்பியர் கருத்தைக் கருதாமல், கலிவெண்பா பொருள் பாகுபாடின்றி அகப்பொருளிலும் புறப்பொருளிலும் வரும் என்று கருதலாயினர். யாப்பருங்கல விருத்தியாசிரியர் தம் உரையுள் கலிவெண்பாவிற்கு அகப்பொருள் புறப்பொருள் பாடல்களையும் எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளார்.

பிற்காலத்தே வாழ்ந்த குமரகுருபரர் புறப்பொருள் பற்றிக் கந்தர் கலிவெண்பா என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார். ஆனால், மிகப்பேரறிஞரான உமாபதிசிவம் தாம் இயற்றியருளிய நெஞ்சுவிடுதூது அகப்பொருள் பற்றியதாதலால் அதனைக் கலிவெண்பா என்றும், தம் ஆசிரியரைப் போற்றும் பொருள் அமைந்த புறப்பொருள் பற்றிய இலக்கியத்தைப் போற்றிப் பஃறொடை என்றும் வேறுபடக் குறித்துள்ளார் என்னிடத்தில் ஓலை ஏட்டில் உள்ள அவ்விலக்கியம் 'போற்றித் திருத்தொடை' என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

திருவாசக காலம் :

சிவபுராணம் அகவல் யாப்புடைய தென்றும், அன்று, கலிவெண்பா வென்றும், கூறுவது மேலோட்டமாய்க் கருதிய உணர்ச்சியால் உண்டானதாகும். அவ்விரண்டும் இன்றி இச்சிவ புராணம் ஓர்வகை வெண்பாவிலே அடங்கும் என்பதும், அது செய்யுள் வெண்பாவே ஆதல் வேண்டும் என்பதும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. சிவபுராணத்துள் பிற்காலக் கலிவெண்பாப் போல் தனிச்சொல் வராமலிருத்தலையும் அறிஞர் கருதியுணர வேண்டும். **இத்தகைய பழைய யாப்புமுறை தேவாரத்தில் இல்லை யாதலால் இத்திருவாசகம் தேவார காலத்திற்கு முற்பட்ட தென்க.**

சிவபுராண யாப்பமைப்பு :

தொல்காப்பியர் 'அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய. தளைவகை யொன்றாத் தன்மை யான " (தொல். செய். 55) என்னும் நூற்பா வினால் வெண்பாப் பெற்றுவரும் (நிலங்களை) அடிகளைக் கூறியுள்ளார்.

இளம்பூரணர் இந்நூற்பாவிற்குத் "தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய, ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சில (இரண்டு) வரும் என்பர்.

அவர் உரையின் கருத்து : இயற்சீர் ஒன்றாமையாற் பிறந்த வெண்டளை பெற்றுவரும் அடிக்கண் அளவடி ஐந்தும் சிந்தடி மூன்றும், வெண்சீர் வந்து ஒன்றும் தன்மைக்கண் நெடிலடி இரண்டும் ஆகப் பத்துவகை அடி வெண்பாவிற்கு வரும் என்பது இங்கே கூறப்பட்டவை நாற்சீரடியில் வரும் எழுத்துவகை அடிகளாகும்.

எனவே, வெண்பாவில் நாற்சீர் கொண்ட அடியில் 7, 8, 9 என்னும் எழுத்துக்கணக்குள்ள சிந்தடி மூன்றும், 10, 11, 12, 13, 14 என்னும் எழுத்துக் கணக்குள்ள அளவடி ஐந்தும், 15, 16 என்னும்

எழுத்துக் கணக்குள்ள நெடிலடி இரண்டும், ஆகப் பத்துவகை அடிகள் வரும் என்க.

இச்சிவபுராணச் செய்யுள் வெண்பா தொண்ணூற்றைந்து அடி உடையது. இவற்றுள் ஈற்றடி ஒன்றும் முச்சீர் அடி; ஏனைய தொண்ணூற்று நான்கும் நாற்சீர் கொண்ட அடிகளாகும்.

இத்தொண்ணூற்று நான்கு அடிகளுள், வெண்பாவிற்குரிய 7, 8, 9 என்னும் எழுத்துக்கணக்குள்ள சிந்தடிகள் ஒன்றும் வரவில்லை. அளவடிகளுள் பத்தெழுத்தடியும் வரவில்லை. அளவடியுள் பதினோரெழுத்தடி ஐந்தும், பன்னிரண்டெழுத்தடி இருபத் தொன்பதும், பதின்மூன்றெழுத்தடி முப்பத்து நான்கும், பதினான் கெழுத்தடி பதினெட்டும், நெடிலடியில் பதினைந் தெழுத்தடி எட்டும் ஆகிய இவைகளே வந்துள்ளன.

இச்சிவப்புராண வெண்பா தொண்ணூற்றைந்து அடிகளிலும் வந்துள்ள சீர்கள் முந்நூற்று எழுபத்தொன்பதாகும். இவற்றுள் தேமாங்காய்ச்சீர் எழுபத்தொன்று, புளிமாங்காய்ச்சீர் நாற்பத் திரண்டு, கருவிளங்காம்ச்சீர் நாற்பத்திரண்டு, கூவிளங்காய்ச்சீர் ஐம்பத்தேழு ஆக மூவகைச் சீருள் வெண்பாவுரிச் சீர் இருநூற்றுப் பன்னிரண்டு வந்துள்ளன.

தேமாச்சீர் தொண்ணூற்றொன்று; புளிமாச்சீர் முப்பத்தெட்டு, கருவிளச்சீர் பதினொன்று; கூவிளச்சீர் இருபத்தாறு ஆக ஈரசைச் சீருள் இயற்சீர் நூற்று அறுபத்தாறு வந்துள்ளன. ஈற்றில் பிறப்பு என்னும் நிரைபு அசைச்சீர் ஒன்று வந்துள்ளது. ஆகச் சிவபுராணத்துள் வந்துள்ள சீர் முந்நூற்று எழுபத்தொன்பதின் பாகுபாட்டினை இவ்வாறு அறிக.

சிவபுராணம் நல்ல தொடை அமைப்பை உடையது ஓரடிக்கும், அதனை அடுத்து வரும் மற்றோரடிக்குமாய் அமைந்த அடி எதுகைத் தொடை இதனுள் பெரும்பாலும் சிறப்பாய் அமைந் துள்ளது ஓரடியுள் வரும் இணை ஒரூஉ முதலியவை மோனை. எதுகை, முரண், இயைபு என்னும் இவைகளைப் பெற்று வந்துள்ளன.

முடிப்புரை :

தொல்காப்பியரால் சொல்லப்பட்ட பல செய்திகள் பிற்காலத் தவரால் மறக்கப்பட்டும், பிறழ உணரப்பட்டும், புறக்கணிக்கப் பட்டும் போயின. அவற்றை நன்கு ஆய்ந்து தமிழுலகத்திற்குத் தந்தால் அது ஒரு நல்ல செயலைச் செய்ததாக அமையும். அறிஞர் உலகம் இப்பணியில் உழைக்க வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு. எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு		வெளி நாடு
1. ஆண்டு வரி	...	20—00	...	030—00
2. தனி இதழ்	...	02—00		
3. ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00

Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொண்டு தமிழ் முன்னேற்றம்

என் :

திரு. மா. 6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல்நிலையம் இதழ்,
அரண்மனை, தஞ்சாவூர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தாந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	60—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
உலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.